# பாரத மணி

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"—பாரதி

ஆசிரியர் : கே. எஸ். வேங்கடரமணி.

| மாலை 2 | ஞாயிறு 9-4-39 வெகுதான்யஞூ பங்குனிமீ 27உ | முத்து 2 |
|---|---|---|

## பொருள் அடக்கம்

—


விஷயம் பக்கம்

1. புதுமுறை அரசாங்கம் ... 34
2. பாம்பு தலையெடுக்கிறது ... 35
3. தென்றல் காற்று ... 37
4. சட்டசபை நக்ஷத்திரங்கள் ... 39
5. வார நடப்பு ... 40
6. காண்பதும் கொள்வதும் (ஸ்ரீ. எஸ். சேஷய்யா) ... 41
7. கிராமசேவை (ராவ்சாகேப். கே. சுப்ரமண்யம்) ... 42
8. சில சீர்கேடுகள் (டாக்டர் டி. எஸ். ரமணி) ... 45
9. பழைய நினைவுகள் (ஸ்ரீ கி. பி. நாகராஜன்) ... 47
10. ராட்டினம் (மாந்சேரி ஸ்ரீ. எஸ். ஈச்வரன்) ... 49
11. இல்லொளி ("துகப்ரியை") ... 53
12. சிறுவர் பகுதி (ஸ்ரீ. எஸ். லக்ஷ்மணராவ் பீஷ்வா) ... 57
13. புத்தக விமர்சனம் ... 58
14. மாயா மச்சீந்திரா ... 60
15. ஹம்பியில் இரண்டு நாட்கள் (ஸ்ரீ. ரா. ஆறுமுகம்) ... 62


—

"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள். ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.



# புதுமுறை அரசாங்கம்

சென்னை சர்க்கார் பட்ஜெட்டைப் பற்றி எழுதிய பொழுது அது ஒரு புது முறை — நவீனமுறை — திட்டமென்று சொன்னோம். வரி விதிப்புக்கொள்கையிலும் வரவு செலவு கணக்கைச் சரிக்கட்டும் முறையிலும் சரியான தத்துவங்களை அனுசரித்து நமது பிரதம மந்திரி தமது திட்டத்தைத் தயாரித்திருக்கிறார்.

அதுமட்டுமல்ல; அரசியல் முறையிலேயே காங்கிரஸ் சர்க்கார் ஒரு புது மாதிரி அரசாங்கம் என்கிறார். நமது பிரதம மந்திரி விற்பனை வரி மசோதா விவாதத்திற்குப் பதில் அளிக்கும் பொழுது அவர் அந்தப் புது கினுசை சூசனையாகக் குறிப்பிட்டு முதலாளிகளுக்கு ஒரு எச்சரிக்கையும் செய்தார்.

“முதலாளித்துவ முறையிலோ, வர்க்கமற்ற அபேதவாத முறையிலோ, உலகம் இன்று பொது உடைமையை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறது. தனி உடைமையை அகற்றி பொதுவுடைமையை ஏற்படுத்துவதா அல்லது வரி செலுத்தக் கூடியவர்களுக்கு மேலும் மேலும் வரிகள் விதித்து அந்தத் தொகை மூலம் வரி பளுவை சமமாக்கி வாழ்க்கையின் அவசியங்களை பூர்த்தி செய்யும் அம்சங்களில் கூடியமட்டும் எல்லோரும் பங்கு பெறும்படி செய்து பொதுவுடைமை இயக்கத்தைத் தடுப்பதா என்பதுதான் இப்பொழுது பிரச்னை...பின் கண்டதைத் தான் இந்த சர்க்கார் செய்ய முயலுகிறது. இந்த மாதிரி வரியை விதிக்கும் எந்த சர்க்காரும் இந்த நோக்கம்தான் கொண்டிருக்கக்கூடும். இதைத் தவிர வேறு வழியில்லை” என்று ராஜாஜி சுருக்கமாகப் புது முறையை விளக்கினார்.

தனிச் சொத்துரிமையை நீக்காமல் வாழ்க்கையின் சௌகரியங்களை யெல்லாம் பொதுவாக ஏற்படுத்தி அனுபவிப்பது என்ற இந்த தத்துவம் தான் காங்கிரஸ் சர்க்காரின் நோக்கம் என்று ராஜாஜி விளக்குகிறார். இது தான் காந்தீயத்தின் அடிப்படையும். இது தான் நமக்கேற்ற அபேதவாதம் கூட.

வரிச்சுமையை கிராமத்திலிருந்து பட்டணத்திற்கு மாற்றுவது என்று ராஜாஜி குறிப்பிட்டதும் இதுதான். மதுவிலக்கு திட்டமும் இதற்கான ஒரு வழிதான் என்று அவர் சொன்னதை ஸ்ரீலாங்கிலி துரை கேலி செய்தார். மது விலக்கிற்கு இது புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட காரணம் என்று சொன்னார். இல்லவே இல்லை. பழைய காரணம்தான் மூலகாரணம். கிராமத்து ஏழைகளின் சில்லறைகளை யெல்லாம் ஒன்று சேர்த்து மூட்டை கட்டும் முதலாளியான கள்ளுக்கடை குத்தகைதாரோ, பிரதம குத்தகைதாராக சர்க்காரோ இருப்பது தவறு என்பது தான் இதற்குக் காரணம். அப்படி நூற்றாண்டுகளாக மூட்டை கட்டின தொகை மறுபடியும் குடியானவன் கைக்கு கஷ்ட நிர்வாரணம் என்ற உருவத்தில் மறுபடியும் திரும்பிப் போகவேண்டுமென்பது தான் கொள்கை.

ஒரே அடியாக பொதுவுடைமை தத்துவம் மூலம் தனிச்சொத்து என்பதே இல்லாமலடித்து எல்லாவற்றையும் எல்லோருக்கும் பொது வாக்கிவிட வேண்டுமென்பதற்கு பதிலாக, வாழ்க்கை எல்லோருக்கும் இனியதாகும் அளவுக்கு மட்டும் பணக்காரர்களிடமிருந்து சொத்தை வரி மூலமாக வசூலித்துப் பகிர்ந்து கொடுப்பது தான் இந்த முறை. இது காந்திய அபேதவாதம் Humanitarian Socialism என்றும் இதைச் சொல்லுவார்கள்.

இந்த முயற்சியை முதலாளிகள் எதிர்த்தால் என்ன அர்த்தம்? தங்கள்

(36-ம் பக்கம் பார்க்க)

குறிப்பு

# பாம்பு தலை யெடுக்கிறது

இந்த தடவை ஹிட்லர் செய்த பிரசங்கம் அவ்வளவு துடுக்காக இல்லை; அதுவும் சேம்பர்லேன் பிரசங்கத்திற்குப் பின் அது சப்பென்று கூட இருக்கிறது என்று சொல்லலாம். ஜெர்மனியின் பலத்தைப் பற்றியும் சுயமரியாதையைப் பற்றியும் பேசினார்; விஸ்தரிப்பின் நியாயத்தையும் சொன்னார். பிரிட்டன் "கிழவி பதிவிரதையானதுபோல"ப் பேசுவதாகவும் கூறி இடித்துக் காட்டினார். "என்னைச் சொல்லுகிறாயே, உங்கள் யோக்யதை என்ன? பாலஸ்தீனத்தைப்பற்றி சொல்லட்டுமா?" என்றார். ஆனால் ஸ்வரம் இறங்கித்தான் இருக்கிறது இப்பொழுது.

ஆங்கிலத்தில் "மிதிபட்ட புழு திரும்பும்" என்று ஒரு பழமொழி உண்டு. அதுபோல இது வரையிலும் ஹிட்லர் காலின் கீழ் மிதிபட்ட பிரிட்டிஷ் புழு திரும்பி விட்டது கடிக்க. இதுவரையிலும் கண்மூடித்தனமாக தனது கொள்கையே சரியென்று, நாடுகளை ஹிட்லருக்குப் பலி கொடுத்த சேம்பர்லேன் கடைசியாக விழித்துக்கொண்டு விட்டார்.

இனிமேலும் ஹிட்லரைச் சாந்தப் படுத்திக் கொண்டே போவது என்றால் அவரைக்கூடிய சீக்கிரம் ஐரோப்பாவின் சர்வாதிகாரியாக்கியாக வேண்டும் என்ற நுட்பம் இன்று தான் சேம்பர்லேனுக்கு உதித்தது. லாயிட் ஜார்ஜும் சர்ச்சிலும் ஆதிமுதல் கரடியாகத் தான் கத்திக் கொண்டு வந்தார்கள். இன்று அவர்கள் கட்சி ஜயித்து விட்டது. ஜெர்மனியின் துராக்கிரமத்திற்கு இனிமேல் இடம் கொடுப்பதில்லை யென்று முடிவான ஒரு தீர்மானத்திற்கு வந்து, சேம்பர்லேன் பிரிட்டன், பிரான்ஸ் சார்பாக போலந்துக்கு உதவியளிப்பதாக ஒப்புக்கொண்டு விட்டார்; ருமேனியாவுக்குக்கூட அவ்விதம் உறுதி அளிக்கலாம். கைபோட்டுத் தொடக் கூடாது என்று இது வரையில் ஒதுக்கி வைத்திருந்த ருஷிய நட்பையும் இப்பொழுது சேம்பர்லேன் தேடுகிறார்.

சர்வாதிகாரிகள் இருவரும் இதுவரையிலும் மந்திரம் போட்டுக் கட்டி வைத்திருந்த ஜனநாயக நாடுகள் என்ற பாம்பு இன்று தடை நீங்கினதுபோல படமெடுக்க ஆரம்பித்துவிட்டது. ருஷியா ஒருபுறமும் பிரிட்டனும் பிரான்ஸும் ஒரு புறமுமாக இருந்தால் ஜெர்மனி கொஞ்சம் யோசனை செய்ய வேண்டி யிருக்கிறது. ஹிட்லரின் அதட்டல் அத்தியாயம் முடிவடைந்து விட்டதுபோலத் தெரிகிறது. போலந்திலும் ருமேனியாவிலும் நாங்கள் ஒன்றும் தலையிடவில்லையே?" என்கிறது ஜெர்மனி இப்பொழுது. ஆனால் ஒன்றும் சொல்லுவதற்கில்லை. சர்வாதிகாரிகளின் திட்டம் எவ்வளவு மூடு மந்திரமோ அவ்வளவு உறுதியற்றது ஐரோப்பிய ஜனநாயக நாடுகளின் வெளிநாட்டுக் கொள்கையும். பிரிட்டிஷ் வெளிநாட்டுக் கொள்கையில் ஒரு புது சகாப்தம் ஆரம்பமாகி விட்டதென்று பார்லிமெண்டில் பிரதம மந்திரி கூறினார். எதிர்க் கட்சி அங்கத்தினர்களும் சர்ச்சிலும் லாயிட் ஜார்ஜும் கூட சேம்பர்லேனை ஆதரித்து விட்டதால் ஒரு வேளை ஜனநாயகத்திற்கு நல்ல காலம் பிறந்து விட்டதோ என்னமோ யார் கண்டார்கள்?

## மற்றொரு வெற்றி

சமஷ்டி கோர்ட்டின் பிரதம நீதிபதி சர்தார் படேலுக்குச் சாதகமாக அளித்த தீர்ப்பு காந்திஜிக்கு மற்றொரு வெற்றி; சமஸ்தானப் பிரஜைகளின் சுதந்திர இயக்கத்திலும் இந்தத் தீர்ப்பு ஒரு பெருத்த மாறுதலை உண்டாக்குவதாகும். காந்திஜியின் உண்ணாவிரதம் முதலே அந்த இயக்கம் முழு உயிர்பெற்று நடமாட ஆரம்பித்து விட்டது. வைசிராய் பிரசங்கமும், இந்தியா காரியதரிசிப் பேச்சும், காந்திஜி சமஸ்தானப் பிரஜைகளுக்கு அளித்த உபதேசமும், புது தத்துவ சூசனையும், ஸர் மாரிஸ் கயரின் தீர்ப்பும் ஒன்றின்பின் ஒன்றாக வெகு சிக்கிரமாகவும் தொடர்ச்சியாகவும் நிகழ்ந்து இன்று ஹைதராபாத் நைஜாம் வைசிராயின் பிரசங்கத்தை ஆமோதித்துத் தந்தி யனுப்பும் நிலைமை வரையில் வந்து விட்டது.

முக்கியமாக இந்தத் தீர்ப்பை ஒரு தத்துவத்தின் வெற்றியே என்று கருதவேண்டும். காந்திஜி எதற்காக உண்ணாவிரதம் கொண்டாரோ அந்த தத்துவத்தின் வெற்றி. இந்த மூலாதாரமான வெற்றி சூரியவொளிபோல் பரவி மற்ற திக்குகளிலும் தன் கிரணங்களைச் செலுத்தி உயிர் ஊட்டும். அதன் ஆத்ம பலம் சமஸ்தானப் பிரஜைகளின் இயக்கத்திற்கு ஒரு அசைக்க முடியாத அடிப்படையாக அமையும்.

ராஜ்கோட் முடிவை. எதிர்பார்த்தும் வைசிராய் பிரசங்கம் சமஸ்தானாதிபதிகளிடையே ஏற்படுத்தும் மனமாற்றத்தை எதிர்

பார்த்தும் காந்திஜி இயக்கத்தை எல்லா இடங்களிலும் தாத்காலிகமாக நிறுத்தி வைததிருக்கிறார். ராஜ்கோட் முடிவு தெரிந்துவிட்டது; சமஸ்தானதிபதிகள் மனது லேசில் மாறப்போகிறதா? ஆனால் காந்திஜி பாய்வதற்கு முன்னால் பதுங்கும் முறையே இதுதான். சமஸ்தானங்களுக்கு இன்னும் சிறிதுகாலம் அளிப்பார். தர்ம யுத்தத்தின் முறையும் இது தானே?

## தர்ம க்ஷேத்திரத்தில்

தர்ம க்ஷேத்திரமாகிய குருக்ஷேத்திர பூமியில்தான் இன்று காந்திஜி இருந்துகொண்டு இந்தியாவின் எதிர்காலத்தைப்பற்றி திட்டம் போட்டுக்கொண்டிருக்கிறார். சமஸ்தானப் போர் விஷயமாக ஒரு புது மாதிரி அஸ்திரம் தயார் செய்து கொண்டிருக்கிறார். காங்கிரஸ் வேலைவிஷயமாகவும் ஏதோ தீர்க்காலோசனை செய்துகொண்டு இருக்கிறார் என்பதில் சந்தேகமில்லை.

## விற்பனை வரி

விற்பனை வரி மசோதாவை ஆராய்ச்சி செய்ய சட்டசபை ஒரு தனிக்கமிட்டி நியமித்து மசோதாவை அதற்கு அனுப்பியிருக்கிறது. ஏப்ரல் 24-ம் தேதிக்குள் அந்தக் கமிட்டி தன் அறிக்கையை சமர்ப்பிக்கவேண்டும் என்றும் தீர்மானித்தது.

அந்த சந்தர்ப்பத்தில் பிரேரணையை எதிர்த்துப்பேசிய பலர் சர்க்கார் கொள்கையை அறிந்துகொள்ளாமலேயே அதைத் தாக்கினார்கள். சிலர் பயமுறுத்தவும் செய்தார்கள். வியாபாரிகள் இதர மாகாணங்களுக்குப் போய்விடக்கூடும் என்றார் ஒருவர். ஆனால் இதர மாகாணங்களும் இந்தமாதிரி வரி விதிக்கக்கூடும் என்ற எண்ணம் அவருக்குத் தோன்றவில்லை. பம்பாய் ஏற்கனவே விற்பனை வரி மசோதாவைக்கொண்டுவந்து சட்டசபையில் நிறைவேற்றி விட்டது. சில சமஸ்தானங்கள் கூட அப்பேர்ப்பட்ட வரி விதிக்கலாம் என்று தெரிகிறது. எனவே, சென்னை சர்க்கார் விதிப்பை ஒரு வகுப்புவாதப் பித்தர் பிராமணரல்லாதாருக்கு ஏற்பட்ட விதிப்பு என்று சொன்னது மற்ற சர்க்கார்களுக்குப் பொருந்தாதே?

## தேசீய வாரம்

காங்கிரஸ் சர்க்கார் நிர்வாகம் பெற்றபிறகு கொஞ்சம் காங்கிரஸ் வெளி இயக்கம் படுத்துப் போய்விட்டதென்பதில் சந்தேகமில்லை. அதற்கு காங்கிரஸ் மந்திரிசபை பொறுப்பாளி இல்லை என்றாலும் காங்கிரஸ் சட்டசபை அங்கத்தினர்கள் நிச்சயம் பொறுப்பாளிகள்தான். நாட்டின் இயக்கத்தை அனல் குன்றாது காப்பாற்றவேண்டியது தொண்டர்கள் பொறுப்பு. அவர்கள் ஆலஸ்யம் கொண்டுவிட்டதன் பலனாக நாட்டில் பொதுமக்கள் தொடர்பு கொஞ்சம் மட்டுப்பட்டுவிட்டது. தேசீய வாரமென்பதைப்பற்றி நமக்கு நினைப்பூட்டவேண்டியிருக்கிறது. பத்திரிகைகளில் அதைப்பற்றி பேச்சே காணோம். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் இப்பொழுதுதான் சுற்றறிக்கை விட்டு கதர் விற்பனை விஷயமாக தமிழ் நாடு அதிக ஊக்கமாக இருக்கவேண்டுமென்கிறார்.

ஏப்ரல் 6 முதல் 13 முடிய தேசீய வாரம். முன்பெல்லாம் தேசீய வாரமென்றால் பிரமாதப்படும். எங்குபார்த்தாலும் பொதுக் கூட்டங்களும் கதர் விற்பனைகளும் ஊர்வலங்களும் பஜனைகளுமாக இருக்கும். இப்பொழுதும் ஏதோ திட்டங்கள்தான் போட்டிருக்கிறார்கள் ஆனால் பழைய 'சாத்து' இல்லை; ஏன்?

தமிழ் நாட்டில் கதர் விலைபோகவில்லை என்பதைப்பற்றி முன்பே ஒருதரம் எழுதி இருந்தோம். சர்க்கார் சிப்பந்திகளுக்கு கதர் உடை அளிப்பது சரியல்லவென்று பிரதம மந்திரி கூறிவிட்டார். ஏதோ சில சர்க்கார் இலாகாக்களில் மட்டும் சிறிதளவு கதர் செலவாகிறது. எனவே பொது மக்கள்தான் முன் வந்து ஏராளமாக வாங்கி இயக்கத்தை ஆதரிக்கவேண்டும். ஏழை மக்களுக்கு உணவு அளிக்கவேண்டும்.

தேசீய வாரத்தில் கதர் விலை ரூபாய்க்கு ஒரு அணா குறைவு என்று கேள்விப்படுகிறோம். தமிழ் மக்கள் இந்த வாரத்தில் கதரை அதிகமாக வாங்கி உதவுவார்கள் என்று நம்புகிறோம்.

---

(34-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைக்குத் தாங்களே விபத்து வரவழைத்துக் கொள்ளுகிறார்கள், அவ்வளவு தான். புரண்டு வரும் பொது வுடைமை வெள்ளத்தை இந்தமாதிரி அணைபோட்டுத் தடுக்கா விட்டால் முடிவு தெரிந்ததுதான்.

ஆகையால் ராஜாஜி சரியான சமயத்தில் எச்சரிக்கை கொடுத்திருக்கிறார்.

காங்கிரஸ் அரசாங்கம் முதலாளித்துவத்தை ஆதரிக்கும் அரசாங்கமுமல்ல; பொதுவுடைமைதத்துவத்தை ஆதரிக்கும் அரசாங்கமுமல்ல; காந்திய அபேதவாத தத்துவமாகிய சமரஸத்தை ஆதரிப்பது. அது தான் நமது நாட்டுக் கேற்றது; அதுதான் இங்கே தலையெடுக்கும்.

# தென்றல் காற்று

சென்ற வாரம் முஸோலினி வேடிக்கை யாகப் பேசினர். இந்த வாரம் ஹிட்லர் பேசி யிருக்கிறுர் கிண்டலாக. ஜனநாய கங்கள் கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு யுத்தத்திற்குத் தயாராக இருப்பதாகச் சொல்லும்போது சர்வாதிகாரிகளுக்கு மகா வேடிக்கையாக இருக்கிறது. "ஏது ரொம்ப கோபித்துக் கொள்ளுகிறுப்பிலே இருக்கே" என்ற தோரணையில் ஹிட்லர் வில்ஹெம்ஷேவனில் பேசினர். சேம்பர் லேன் பேச்சைக் கேட்டு ஹிட்லர் பயந்து அரண்டு போய்விடுவார் என்று அரசியல் வாதிகள் நினைத்தார்கள். ஆனல் ஹிட்லர் பேச்சைக் கேட்ட பிறகு "பார்த்தீர்களா அப்போதே சொன்னேமே, ஹிட்லர் எவ் வளவு நிதானமாகப் பேசி யிருக்கிறுர்" என்கிறுர்கள். "அவர் வேடிக்கையாகப் பேசி யிருக்கிறுரே தவிர வழக்கம்போல் கோபமாக ஒரு வார்த்தை பேசினரா?" என்று கேட்கிறுர்கள்.

* * *

ஹிட்லர் வழக்கம்போல் கோபமாக நெருப்பைக் கக்கியிருந்தால் ராஜ தந்திரி களுக்கு சந்தோஷமா யிருந்திருக்கும். அப்போது, "பார்த்தீர்களா, ஹிட்லர் ஆடிப்போய் விட்டார். சேம்பர்லேனுக் குத் தகுந்த ஜவாப் கொடுக்க தைர்யமில் லாமல் திட்ட ஆரம்பித்து விட்டார்" என்று ராஜ தந்திரிகள் சொன்னல் நம்பக் கூடியதுதானே? ஆனல், ஹிட்லருக்கு ஐரோப்பிய ராஜ தந்திரிகளைப்பற்றி நன் ருக அறிந்திருக்கிறுராகையால் சாணக்கிய தந்திரத்தைக் கையாளத் தெரியும்.

* * *

சேம்பர்லேன் சக்கைப் போடு போட்டு விட்டதாக பிரிட்டிஷ் பத்திரிகைகளுடன் நாமும் சேர்ந்து சந்தோஷிக்கலாம். "போலந்து சுயேச்சைக்கு ஹானி வந்த தாக தெளிவாகத் தெரிந்தால் பிரிட்டன் போலந்துக்கு உதவி செய்யும்" என்று சேம்பர்லேன் சொன்னர். பிரிட்டன் போலந்தின் கஷ்ட காலத்தில் உதவி செய் யப் போகிறது; அதில் சந்தேகமில்லை. ஆனல் ஒரே ஒரு சின்ன விஷயம். போலந்து கஷ்ட காலத்திலிருக்கிறதென்று தெளிவாகத் தெரிய வேண்டும் இங்கிலாந் துக்கு! அவ்வளவுதான்! அதற்கப்புறம் கவலேயேயில்லை.

* * *

"பலாத்காரத்தினல் காரியங்கள் செய் யப் படுவதற்குப் பதிலாக வாக்கு வாதத் தைக் கொண்டும் நேரடியான சம்பாஷனை களைக் கொண்டும் தீர்மானிக்க வேண்டும்" என்பது சேம்பர்லேன் சித்தாந்தம். இன் னுமா இந்தப் பேச்சு வார்த்தைகளில் ஆசை போகவில்லை என்று கேட்கலாம். "மியூ னிச் வாசனை இன்னும் போகாதது வெட்க மில்லையா?" என்று ஹிந்தி எதிர்ப்புப் பாஷையில் வினவலாம். ஆனல் என்ன கேட்டாலும் சேம்பர்லேனுக்கு பேச்சு வார்த்தைகளிலும் வாக்கு வாதங்களிலும் உள்ள ஆசை உடம்போடு பிறந்தது. மிருகங்களுக்கு வால் இருப்பது போல.

* * *

'சண்டித்தனம்' என்கிற வார்த்தை கொஞ்சம் கீழ்த்தரமானதாக இருந்தால் கூட அதைப்போல சரியான அர்த்தத் தைக் கொடுக்கக் கூடிய வார்த்தை தமிழில் வேறு கிடையாது. சண்டித்தனத்தை ஹிந்தி எதிர்ப்பிலிருந்து முஸோலினிவரை யில் எல்லா இடத்திலும் பார்க்கலாம். உதா ரணமாக, முஸோலினி பேசப் போகிறுர் என்றுல் சண்டித்தனம் செய்யப் போகி றுர் என்று வைத்துக் கொள்ளலாம். "நாங்கள் தற்காப்புச் செய்து கொள்ளத் தயாராக இருக்கிறேம்" என்று சமீபத்தில் அவர் சொன்னதற்கு "நாங்கள் மற்றெரு தேசத்தை விழுங்க ஏற்பாடு செய்து விட் டோம்" என்று தான் அர்த்தம். சண் டித்தனம் உள்ளவர்கள் பேசி விட்டால் என்னசெய்யப்போகிறுர்கள் என்று ஊகித் துக் கொள்ளலாம். அதாவது என்ன சொன்னர்களோ, அதற்கு நேர் மாருகச் செய்வது தான் அவர்கள் லக்ஷணம்.

அதேமாதிரி ஹிட்லர் "இனிமேல் ஐரோப்பில் எங்களுக்கு நாடுவேண்டா

மென்றால் என்ன அர்த்தம்? அது யாருக் குத்தெரியாது? சேம்பர்லேனுக்குக்கூட அந்த அர்த்தம் தெரிந்துபோய்விட்டது.

* * *

டாக்டர் ராகவேந்திர ராவை நம்முடைய ஆந்திர சகோதரர்கள் வரவழைத்து உபசாரம் செய்தார்கள். ஆந்திர மாகாண சம்பந்தமாக இவ்வளவு ஆர்பாட்டங்களும் நடந்தன. டாக்டர் ராவ் பேசும் போது "நான் சகல விஷயங்களையும் அறிவேன். உங்கள் கட்சி சரியானது என்பது எனக்குத் தெரியும்" என்றார். அடுத்த நிமிஷம் "உங்கள் கக்ஷி சரியானதென்று எனக்குத் தோன்றினால் நான் அதை என்னாலான வரையில் ஆதரிப்பேன்" என்றார். முதலில், ஆந்திரர்கள் கட்சி சரியாகத் தோன்றியது கடைசியில் 'தோன்றினால்' என்று மாறும்படியான பிரமேயம் உண்டாகி விட்டது. பரவாயில்லை.

* * *

"உங்கள் மந்திரி சபை ஆந்திர மாகாணப்பிரிவினை விஷயத்தில் வெற்றி பெறாததின் காரணம் அவர்கள் கைக்கொள்ளும் வழிகளில் தவறு இருப்பதுதான்" என்றார் டாக்டர் ராவ். ரொம்ப சந்தோஷம். மந்திரி சபை கைக்கொண்ட வழிகள் சுத்தத் தப்புதான். மகா தப்பு.

* * *

ஆனால் டாக்டர் ராவ் ஒரு நல்ல வழியாக ஒன்று கண்டு பிடித்து நமது மந்திரிகளுக்குச் சொல்லித் தொலைத்து விட்டுப் போகலாம். அந்த வழியைக் கைப்பற்றியாவது நமது மந்திரிகள் ஆந்திர மாகாணத்தை வாங்கிக் கொடுப்பார்கள். டாக்டர் ராவ் இந்த யோசனைச் சொல்லிக் கொடுத்து அதற்காக வக்கீல் 'பீஸ்' கேட்கக்கூடாது. அப்படிக் கேட்டால் ஆந்திர மகா சபைதான் கொடுக்கவேண்டும்.

* * *

"நான் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் சமஷ்டி பிரதம மந்திரியாக வரும் நாளை எதிர் பார்க்கிறேன்" என்று ஆவலுடன் கூறினார் டாக்டர் ராவ். ராஜாஜி பிரதம மந்திரியாக ஆகிவிட்டால் டாக்டர் ராவின் ஆவலும் லக்ஷ்யமும் பூர்த்தியாகி விடும் என்று சொல்லுவது போல் அவர் வார்த்தை தொனிக்கிறது! ஒருவேளை ராஜாஜி சமஷ்டி பிரதம மந்திரி ஆகி அதனால் டாக்டரின் பெரிய லக்ஷியம் பூர்த்தியாகி விட்டால் டாக்டர் ராவ் அவரது அல்ப பதவியை விட்டு இந்தியாவுக்குத் திரும்பி வந்துவடுவார் என்று நம்பலாம்.

* * *

ஒரு தடவை சென்னை சட்டசபைக்குப் போய் மெம்பர்கள் முகத்தைப் பார்க்க வேண்டும். ஒருவர் பேசுவது மற்றொருவருக்குப் புரியாதபோது, ஆனால் அதை அவர் புரிந்துகொள்ள பகீரதப்பிரயத்தனம் செய்யும்போது, அவர்முகம் எப்படித்தோன்றும் என்பதைப் பார்க்க ஆசையாயிருக்கிறதல்லவா? ஆனால் மெம்பர்களுக்குப் பரதநாட்டியம் தெரிந்திருந்தால் சமிக்ஞை மூலமாக கஷ்டமில்லாமல் கருத்தை வெளியிடலாம்.

* * *

ஜெய்பூரிலிருந்து முஸ்லீம்கள் ஆயிரக் கணக்கில் வெளியேறுகிறார்களாம். இந்த நெருக்கடியைத் தீர்க்க தர்பார் வீரவாலாவையும் ஸர் பன்னீர்செல்வத்தையும் தூது அனுப்பலாம். இரண்டுபேர்களும் சீக்கிரத்தில் சமாதானத்தை உண்டாக்கி விடுவார்கள்.

# *சட்டசபை நக்ஷத்திரங்கள்*

(நிருபர்)

பட்ஜெட்கூட்டம் கலைந்துவிட்டது. அங்கத்தினர்கள் 'அப்பாடா' என்று ஊர் போய்ச் சேர்ந்துவிட்டார்கள். ஒரு மாதத்திற்குமேலாக தினமும் மாலை 5-மணி முதல் இரவு 8-மணி வரை நடந்த நடவடிக்கைகளை கவனித்த ஒருவன் மனக்கண் முன் இப்பொழுது என்ன நிலைத்து நிற்கிறது?

முதலில் ராஜாஜியும் அவருடைய சொல் திறமையும்தான். அவர் பிரதம மந்திரி ஆனபிறகுதான் தனது பூர்ண சாமர்த்தியத்தையும் காட்டுகிறார். இதற்கு முன்னால் அவருடைய திறமை பூராவையும் 'கேட்கும்' படியான பிரமேயம் ஏற்படவில்லை. பிரதம மந்திரி ஸ்தானத்திற்கு வந்தபிறகுதான் அவருடைய எதிர்ப்பு சக்திக்கு வளர்ச்சியும் பரவ இடமும் உண்டாயிற்று; சட்டமறுப்பு சத்தியாக்கிர காலங்களில்கூட ராஜாஜி அவ்வளவு உண்மையான எதிர்ப்பைக் காட்டவில்லை. பதவிக்கு வந்தபிறகுதான் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை தான் எவ்வளவு துச்சமாக நடத்தக்கூடும் என்று காட்டினர். நீல் சிலையை அகற்றி பார்லிமெண்டையே குற்றம் கண்டு பிடித்தார். பார்லிமெண்டின் சரித்திரத்தில் யார் அதை இப்படி வாயடக்கி இருக்கிறார்கள்?

சொல்லப்போனல் அவருக்குச் சமமாக ஒருவரையுமே காணேம். நுட்பமாக வாதம் செய்வதிலோ, சுருக்கென்று பதில் சொல்வதிலோ, தயக்கமின்றி கட்சியை ஆணித்தரமாக ஸ்தாபிப்பதிலோ, தெளிவிலோ, உறுதியிலோ அவருக்கு ஈடாக யாரையுமே சொல்லமுடியாது. உபமானங்கள் மூலமாக அவர் அரசாங்கம் நடத்துகிறார் என்று அருசையால் எதிரிகள் கேலி செய்கிறார்கள். எதிரிகளே அவர் வாக் சாதுரியத்தில் மயங்குகிறார்கள், திகைத்துப்போய் விடுகிறார்கள்.

ஸ்ரீ லாங்கிலி அவருடைய திறமையை சரியாக அனுபவிக்கும் எதிரி. அவரைக் கிளப்பவேண்டு மென்றுதான் ஸ்ரீ லாங்கிலி துரை அவ்வளவு துடுக்காகப் பேசுகிறாரோ என்றுகூட சில சமயங்களில் தோன்றுகிறது. பேசிவிட்டு நன்றாக வாங்கிக்கட்டியும் கொள்ளுகிறார்.

ஸர் பன்னீர்செல்வம் வெறும் கடுகு வெடிப்புதான். சத்தில்லாதபேச்சு, வசைமயம். சரியான தர்க்கவாதமோ, மிதமோ அவரிடம் கிடையாது. துடிக்கும் மீசையுடன்தான் அவர் பேசுகிறார். நகைச்சுவை இல்லை. ஹிதம் இல்லை.

ஸ்ரீ அப்பாத்துரை பிள்ளை சிறந்த அறிவாளி; புள்ளி விவரங்களும் மேற்கோள்களும் இல்லாமல் பேசவே மாட்டார். அவருக்கும் நகைச் சுவை கிடையாது. ஆனல் படபடப்பின்றி சாவதானமாகத் தன் கட்சியை ஸ்தாபிக்க முயலுகிறார். கடமை யுணர்ச்சி மிகவும் உடையவர்.

ஸ்ரீ பஷீர் அகமது சையத் பேச ஆரம்பித்தால் கொஞ்சத்தில் விடமாட்டார் என்றாலும் அவர் பேச்சில் விஷயம் இருக்கும். சிலரைப்போல வெறும் வாய் வீச்சாக இருக்காது அவர் பேச்சு. ஸ்ரீ கிருஷ்ணமாச்சாரி அழகாகப் பேசுகிறார்; சில சமயங்களில் துடுக்காகவும் பேசுகிறார். இவ்விருவர்களும் இளங்கட்சியைச் சேர்ந்த இரண்டு புலிகள் என்று சொல்லலாம்.

ஸ்ரீ அப்துல் ஹமீத்கான் பேசாத சந்தர்ப்பமே கிடையாது. எதிலும் அவர் தலையிடாமல் இருக்கமாட்டார். சொட்டு வைத்தேதான் பேசுவார். ஆனல் அதில் அர்த்தமே இருக்காது.

மேல் சபையில் ஸ்ரீ வி. ஆர். ரெட்டியும், சீனிவாச சாஸ்திரியாரும், டாக்டர் தாமஸும் இருக்கிறார்கள். முதல்தரமான அறிவாளிகள், சிறந்த பிரசங்கிகள். ஸர் கே. வி. ரெட்டியும் காரமாகப் பேசக்கூடியவர்தான். ஸர் மகமது உஸ்மான்தான் சர்க்கார் தரப்பு ஆள்போலாகிவிட்டாரே. வேறு யார் அங்கே? ஸ்ரீ ஸல்டானு ஓயாமல் கேள்விகள் கேட்பார். பல நக்ஷத்திரங்கள் இருந்தபோதிலும் ராஜாஜி ஒருவர்தான் சந்திரன். ராஜாஜியை 'இந்திரன், சந்திரன்' என்று சொல்லவில்லை. ஆனல் அவரைசந்திரன்என்று சொல்லவேண்டும்.

# வார நடப்பு

இந்தியா-பிரிட்டிஷ் வியாபார ஒப்பந்தத்தை மத்திய அசெம்பிளி நிராகரித்துவிட்டது.

பம்பாய் நகரத்தில் மதுவிலக்கு அமுலுக்குக் கொண்டுவரப்பட்டு விட்டது.

திரிபுரி காங்கிரஸ் கூட்டம் ஒழிந்து இவ்வளவு நாட்கள் ஆகியும் இன்னும் காரியக் கமிட்டி அங்கத்தினர்கள் நியமிக்கப்படாதது பற்றி சென்ற சிலநாட்களாக காந்திஜிக்கும் சுபாஷ் பாபுவுக்கும் இடையில் அடிக்கடி கடிதப் போக்குவரத்து நடந்துகொண்டிருப்பதாகச் செய்தி கூறுகிறது.

பம்பாய் மாகாண சட்டசபையில் விற்பனை வரிமசோதா நிறைவேறிவிட்டது.

சென்னை சட்டசபையில் விற்பனைவரி மசோதாவை செலக்ட் கமிட்டிக்கு அனுப்பவேண்டுமென்று கொண்டுவந்த தீர்மானம் நிறைவேறிற்று. எதிர்கட்சியினருக்கு பதிலளிக்கையில் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரி வரியின் தத்துவத்தை எடுத்துரைத்தார். "பொது உடமை வெள்ளத்தைத் தடுக்க இதைத்தவிற வேறு வழி இல்லை" என்றார். "வரி கொடுக்கும் சக்தியுள்ள தனவந்தர்களும் வியாபாரிகளும், மேலும் மேலும் அதிகவரி கொடுக்க முன்வந்து, வரி கொடுக்க சக்தியில்லாமல் வருந்தும் ஜனங்களைக் காப்பாற்ற வேண்டும்" என்று விளக்கிக் காட்டினார்.

ராஜ்கோட் சம்பந்தமாக சமஷ்டிகோர்ட் பிரதம நீதிபதியின் தீர்ப்பு வெளியாகி விட்டது. தீர்ப்பு தாகூர்சாகிப்புக்கு விரோதமாகச் செய்யப்பட்டிருக்கிறது. சமஸ்தானத்தில் அமைக்கப்படும் சீர்திருத்தக் கமிட்டிக்கு அங்கத்தினர்கள் நியமிப்பதில் தாகூர்சாகிப், ஸர்தார் படேல் தேர்ந்தெடுக்கும் நபர்களை ஒப்புக்கொள்வதாகத்தான் ஒப்பந்தம் என்று ஸர் மாரிஸ் கயர் தீர்ப்பளித்துவிட்டார்.

பண்டித ஜவஹர்லால் நேரு நேஷனல் ஹெரால்டு என்னும் பத்திரிகையில், ஐரோப்பிய நெருக்கடியைப் பற்றி வெகு சுவாரஸ்யமான கட்டுரை ஒன்று எழுதி இருக்கிறார். இந்தியா பூர்ண சுயராஜ்யத்தை யடைந்தால்தான் பிரிட்டிஷாருக்கு ஆபத்துக் காலத்தில் இந்தியா உதவிபுரிய முன்வரும் என்று எச்சரிக்கிறார்.

தொழிலாளிகள் வேலை நிறுத்தத்தை சர்வ சாதாரணமாக எண்ணி அதைக் கையாளுவதை, சென்னை பிரதம மந்திரி ஸ்ரீ. ராஜகோபாலாச்சாரியார் தீவிரமாகக் கண்டித்தார்.

ஆந்திர மாகாணப் பிரிவை வேண்டுபவர்கள் கூட்டம் ஒன்று நடந்தது. அக்கூட்டம் ஏகமனதாக "இன்னும் 6 மாதங்களில் ஆந்திர மாகாணம் ஏற்படாவிட்டால் ஒத்துழையாமை இயக்கத்தைக் கையாளுவோம்" என்ற இறுதிக் கடிதத்தை இந்தியா மந்திரிக்கு அனுப்ப நிச்சயத்துக்கு வந்தது.

ஐரோப்பிய நிலைமை நாளுக்குநாள் மாறி வருகிறது. இத்தாலி நியாயமான வழியில், பிரான்ஸைச்சேர்ந்த சில நாடுகளில் தனக்குள்ள உரிமையை ரூபித்தால், பிரான்ஸ் அந்நாடுகளைக் கொடுக்கத் தயாராயிருக்கிறது என்று பிரெஞ்சு தலைவர் முஸோலினிக்கு பதில் அளித்திருக்கிறார்.

முஸோலினி, இத்தாலியர்களுக்கு வசிக்க நாடு போதாவிட்டால், வேறு யாராவது கொடுத்துதான் தீரவேண்டும் என்று கூறுகிறார். அதனால் எந்த உடன்படிக்கை வேண்டுமானாலும் ரத்து செய்யப்படலாமாம்.

ஹிட்லருக்கும், பிரிட்டிஷ் சர்க்காருக்கும் அபிப்பிராயபேதம் ஏற்பட்டிருக்கிறது. ஒருவரையொருவர் கோபித்துக் கொள்ளுகிறார்கள். சேம்பர்லேன் போலந்துக்கு, கொடுத்த ஆங்கிலோ—பிரெஞ்சு ஆதரவைக்கண்டு ஹிட்லர் மீசை துடிக்கப் பேசினார். அதில் "பிறரை துன்புறுத்தவேண்டுமென்கிற எண்ணத்துடன் நான் சிலநாடுகளைக் கைப்பற்றவில்லை. ஜெர்மனியின் பொருளாதார நிலைமை முன்னேற்ற மடையத்தான் நான் பாடு படுகிறேன்" என்று விளக்கிக் காட்டினார். இது யாருக்கும் தெரியாதோ?

பிரிட்டிஷ்—பிரெஞ்சு ஒற்றுமை, ஜனநாயகத்தைக்காக்க இன்னும் ஒருஅடிகூட எடுத்து வைத்துவிட்டது. போலந்துக்கு அளித்த ஆதரவைப்போல், ருமேனியாவுக்கும் பிரிட்டிஷ் சர்க்கார் பிரெஞ்சு ஒற்றுமையுடன்; உறுதி கொடுக்கப் போகிறதாகத் தெரிகிறது. சமாதானத்தை விரும்பும் எல்லா தேசங்களுடனும் ஒத்துழைக்க ஸ்ரீ சேம்பர்லேன் தீர்மானித்திருக்கிறாராம்.

# காண்பதும் - கொள்வதும்

(ஸ்ரீ. எஸ். சேஷய்யா)

வானமொன் றிருப்பதேனோ
வையகத்தின் பசுமையேனோ
வானமொன்று இல்லையென்றேல்
வையகம் அழகில்லையே!

மௌனமாயிருப்பதேனோ
மௌன ஞானியர்கள் எங்கும்
மௌனமா யிருப்பதெங்கும்
மௌன நாதப்ரம்மம் பொங்கும்!

மலர்கள் நறுமணம் ஏனோ
மாதர் முகம் அழகேனோ
மலர்கள் நறுமணம் வீசும்!
மலர்ந்த முகம் குணம் வீசும்!

நீலமாய் காண்பதேனோ
நிலையில்லாக் கடல் வெள்ளம்
நீலவண்ண நிறம் கொள்ளும்!
நிலையில்லாப் பொருள் எங்கும்!

அன்பு என்றும் என்பதேனோ
இன்பம் என்றும் என்பதேனோ
அன்பு இன்பம் எங்கும் காணும்
அகம் உருகிப் பொங்கவே!

இயற்கையா லறிவதேனோ
இயற்கையில் காண்பதேனோ
இயற்கையால் அறிவதுண்டு
இயற்கையும் அகவும் ஒன்று!




# புது நாகரீகம்

(ராவ் சாகிப் கே. சுப்பிரமணியம்)

"சரியாக கிராம விஷயம் தெரியாத சில மனுஷ்யர்கள் சேர்ந்துகொண்டு, இப்போது எங்கே பார்த்தாலும், கிராம முன்னேற்றம், கிராம அபிவிருத்தி கிராம சேவை, கிராம கைங்கரியம் என்று என்னமோ கூச்சல் போடுகிறார்களே. நியூஸ் பேபரிலே எல்லாம் பறக்கிறது. மீட்டிங்குகள் ரொம்ப தடபுடல்; போடோ எடுத்துவிடுகிறார்கள். வரவேற்புப் பத்திரம்! வாக்குச்சாதுர்யமாய் பேச்சு! அடே அமர்க்களம்டா. உண்மையில் என்ன என்று ஊனிப்பார்க்க வேண்டும். நான் பார்த்தவரையில் பத்திரிகைகளில், சில ஊர்களிலே பெரிய மனுஷர்கள் பள்ளிக்கூடத்துப் பையன்கள் தெருக்கூட்டற படங்கள்கூட வருகிறது. இதிலெல்லாம் லாபம் என்ன? வியாதி என்ன என்று தெரிந்துகொள்ளவில்லை. வியாதியை நன்றாய்த் தெரிந்துகொண்டு அதற்கு மருந்து கொடுக்கவேணும். மருந்து, மருந்து டாக்டர், டாக்டர் என்று கூச்சல் போட்டால் வியாதி தீர்ந்துவிடுமா—அதுவும் நம்மை நன்றாய் படித்துக்கொண்டிருக்கிற தரித்திர மென்கிற வியாதி? ஆளுக்கு ஒன்று சொல்கிறார்கள். அதோடு கூட்டம் கலைகிறது. அடுத்த வருஷம் பார்த்துக்குவோமென்று போய்விடுகிறார்கள். அதைப்பற்றி நாம் என் பேசவேணும்? நம் கிராமங்களுக்கு கதிமோக்ஷம் வேண்டுமானால் நாமே போராட வேண்டும்டா. சர்க்கார் செய்யவேணும் என்கிறதை நினைக்கக்கூடாது. நம் காலபலம்கொண்டு, நாம் நிற்கவேணும், சர்க்கார் வேணுமானால் உதவி செய்யட்டும். நமக்கு வயிறு காய்கிறபோது ஊரில் ரேடியோ வைத்தால் என்ன லாபம்? கொஞ்சம் காசு இருக்கிறவன், ஒண்ணுமே இல்லாமல் விட்டொழிக்கிறவர்கள் விசாரமில்லாமல் கேட்பார்கள். மைனர் பஞ்சாயத்தென்று போட்டு, ஊரிலே லைட் போட்டுட்டா சரியாப்போச்சா? ஊருக்குள்ளே கிராம முன்னேற்ற மோட்டார் வந்தூட்டு போனால் லாபமா? இதெல்லாம் என்னத்துக்கு? இப்போது இவைகள் மும்முரமாயிருக்கிறாப்போலே இருக்கிறது. டாக்டர், மருத்துவச்சி கூப்பாடு கொஞ்சம் குறைச்சல் மாதிரி இருக்கிறது.

"நான் சொன்னால் எல்லாருக்கும் காதிலே விழுமா? என்னமோ பட்டிக்காட்டான் கத்திக்கொண்டு கிடக்கிறான் என்றுதானடா சொல்லுவார்கள். நான் சொல்லுகிறது உங்களுக்கெல்லாம் பிடிக்குமோ, பிடிக்காது. ஆனால் எனக்குத் தோணுகிறதைச் சொல்லுகிறேன். நன்றாக யோசனை செய்து பார். தேச சரித்திரம் படித்திருக்கிறாயல்லவா? இப்போது பள்ளிக்கூடத்தில் சொல்லிக்கொடுக்கிறதிலே அல்ல. அதிலே ஒன்றும் சரியாகத்தெரியாது. வேறு கேள்விப்பட்டதிலே இருந்தும், கோவில் குளங்கள் இருக்கிறதிலிருந்தும் நம் தேசம் எப்படியிருந்திருக்கலாம் என்று ஊகித்துப் பாருங்கள். இப்போது நாகரீகம் என்று சொல்லுவது, மின்சார விளக்கும், மல் வேஷ்டியும், காப்பியுமாகப் போய்விட்டது. ஜனத்தொகை ஜாஸ்தியாகி வரும்படி குறைந்தது. இதற்கு அதற்கு என்று ஊரைவிட்டு வெளியே போக ஆரம்பித்துவிட்டோம். முதலில் அதைத்

தடுக்க வேண்டும். அப்பொழுதுதான் க்ஷேமம்.

"நாம் தினே தினே கீழே தாழ்ந்துவிட்டோம். தேசத்திலே எத்தனை சத்திரம் சாவடிகள்! எல்லாம்கூட காலியாகிவிட்டன! அந்தக்காலத்திலே ஊரில் அதிதிகளுக்குச் சாப்பாட்டுக்கு குறைச்சல் இருந்ததா? இப்போது யாராவது சொந்தக்காரன்கூட ஏன் வருகிறான் என்று இருக்கிறது. என்னடா, துணி கிழிந்தால் ஊசியும் நூலும் வெளிதேசத்திலே யிருந்துதானே காசு கொடுத்து வாங்கவேண்டும்? கேவலம் நெருப்புக் குச்சிக்கூடச் சொல்லலாம். கணக்குப் பார். ஒவ்வொரு வீட்டிலும் எவ்வளவு காசு இந்தமாதிரி சின்ன சாமான்களுக்குக்கூட செலவாகிறது? இப்படி ஒவ்வொன்றுக்கும் நம் காசு வீட்டுச் சாமான்கள் மூலமாய் எவ்வளவு போய்க்கொண்டிருக்கிறது? கொஞ்சமாயிருக்கிறது என்று நினைக்கிறாயோ? நம் வீட்டிலேயே பார். எல்லாம் வெளிநாட்டுச் சாமான்தான். நாகரீக மோஸ்தர்டா, பாஷன்! பித்தளை, ஈயம், வெங்கலம், அலுமினியம் முதலியவை எல்லாம் என்னத்துக்கடா இந்த கஷ்ட காலத்திலே? திருட்டுப்போனாலும் போச்சு. ஓட்டை உடைசல் ஆனால் பசங்களுக்கு பேரிச்சம்பழம் வாங்கறது தானே! இதற்குப் பதிலாக நம்ம ஊர் குசவனிடம் மண் பாத்திரங்கள் வாங்குகிறது. தேசத்துக்கும் சௌகரியம் என்கிறார்கள். அவனுக்கும் தொழிலாயிற்று, நமக்கும் காசு குறைச்சல். பழைய காலத்திலே எல்லாம் மண் பாண்டங்களிலே தானே காரியங்களாச்சு. Ditman தகடுகளும் ஜெர்மனியிலிருந்து வரும் பெல் மெடலும், மெக்ஸிகன் லெட்டும் வேண்டாம் நமக்கு. பழைய காலம் மாதிரி மண் பாத்திரங்களுக்குத் திரும்புவோமே! இரண்டாவது, நைஸ் துணிமணி, சரிகை, பட்டு இதெல்லாம் வேண்டாமே. நாமே சுகமாயிருக்கிற காலத்திலே நூல் நூற்றோமானால் நம் ஊரில் இருக்கிற தறியில் நெய்து கொள்ளப்படாதா? முன் காலத்திலே அப்படித்தானே நடந்தது. நமக்குக் காசு செலவில்லே. நம் வயலிலே பருத்தி விளைகிறது. கூலியில்லாமல் நாமும் நம் பொம்மனாட்டிகளும், கிழவி, குமரி எல்லோரும் அதை நூலாகப் பண்ணிவிடுகிறார்கள். நெசவுக்காரனுக்கு கொஞ்சம் அரிசியும் எண்ணெயும் கொஞ்சம் கூலியும் கொடுத்தால் வேண்டிய துணி சுலபமாகக் கிடைக்கிறது. அதிலே பருத்திக்கொட்டையும் நம் மாட்டுக்கு ஆகிறது. பாலும் ஜாஸ்தி. போஷணையும் திரேக திடமும் அதிகம். ஏன்டா இப்படி செய்யக்கூடாது நாமெல்லாரும்? தேசமெல்லாம் கதர் என்கிறார்களே. மூன்றாவதாக, நம்மிடம் இருக்கும் மணிலாக்கொட்டை ஆமணக்கு எல்லாவற்றையும் அப்படி அப்படியே விற்றுவிட்டு கிரோஸின் ஆயிலும் கிளாஸ் சிமினியும் அரிகன் லாந்தரும் வாங்கி விடுகிறோம். அதிலே என்ன ஆச்சு? சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரையிலும் மூக்குக் கண்ணாடி மயமாகப் போய்விட்டது. அதிலே வேறே செலவு. நம்மகிட்ட விளைந்த ஆமணக்கு மணிலாக்கொட்டை எண்ணெய்களை விளக்குக்கு உபயோகிக்கப்படாதா? நாம் இப்போது என்ன பண்ணுகிறோம். ஒரு வண்டி கொட்டையைக்கொண்டுபோய் கம்பெனிக்காரன் சொன்ன விலைக்குக் கொடுத்துவிட்டு, சீசா கிரோஸின் எண்ணெய், சிம்னி, லாந்தர், மாட்டுக்குப் பிண்ணாக்கு, பருத்திக்கொட்டை மூக்கணாங்கயிறு, தாம்புக்கயிறு, குழந்தைகளுக்கும் மலிவுத் துணிகள் வாங்கிக்கொண்டு கொஞ்சம் பிஸ்கோத்துடனும் (சீமைச் சரக்கு) திரும்பி வருகிறோம். பாக்கி பணம் ஏதாவதிருந்தால் கடன்காரனாவது மணியக்காரனாவது வாங்கிக்கொண்டு போய்விடுகிறான். சரியாப் போச்சா? இதை நாமே எண்ணெய் பண்ணி உணவுக்கு உபயோகிக்கப் படாதா? விளக்குக்கு உபயோகிக்கக்கூடாதா? மிச்சம் எண்ணெயை விற்கலாமே. அந்தப் பிண்ணாக்கை மாட்டுக்கு உபயோகிக்கக்கூடாதா? வயல்களுக்கும் எருவாகப் போடலாமல்லவா? பயிர் நன்றாக விளையாதா? இப்போது பாருங்களேன், நம்ம ஊர்களி லிருந்து லக்ஷக்கணக்கான மூட்டைகள் மேலச் சீமைகளுக்கு கப்பலில்போகிறதே. லாபத்திற்கில்லாமல் தானே அவர்கள் வாங்குகிறார்கள்? அதை நாமே ஏன் அனுபவிக்கலாகாது?"

"ஏன் தாத்தா! இவ்வளவு கப்பல் கப்பலாய் மல்லாக்கொட்டை வாங்கிக்கொண்டு

போகிறார்களே, சமுத்திரத்திலேயும் ரயிலிலேயுமாக எத்தனையோ சிப்பந்தி கமிஷன் முதலிய செலவோடு. அதை என்ன செய்கிறார்கள்? நல்ல லாபமாய்த்தான் இருக்க வேண்டும். நாம் ஏன் அந்தமாதிரி நம் தேசத்திலே செய்யப்படாது?"

"பெரிய பெரிய தொழில்கள் செய்ய நல்ல தொழில் ஞானம் வேண்டும். அது நம்மிடம் இல்லை. சர்க்காரில் செய்யலாம். அல்லது செய்யக் கற்றுக் கொடுக்கலாம். எனக்குத் தெரிந்த வரையில் சர்க்கார் வேலை செய்ய ஆரம்பித்தால் லாபம் அநேகமாக உண்டாகிறதில்லை. அதற்குக் காரணங்கள் அநேகமிருக்கின்றன. வேண்டுமானால் எனக்குத் தெரிந்ததை சொல்லுகிறேன். ஆனால் சர்க்கார் விஷயங்கள் எல்லாம் விசாரித்து நமக்கெல்லாம் காட்டிக்கொடுக்கும்படி உத்தியோகஸ்தர்களை ஏற்பாடு செய்யலாம். அல்லது ஒரு சோதனை செய்யும் சாலையை ஏற்படுத்தி அதின் அனுபவங்களை ஜனங்களுக்குத் தெரிவிக்கலாம் விவரமாக. எல்லாச் செலவும் போக கொஞ்சமாக இருக்கும் பக்ஷத்தில் ஜனங்கள் உடனே புகுந்துவிடமாட்டார்களா? இந்த மல்லாக்கொட்டையில் மேலச் சீமையிலே எண்ணெய் எடுத்து ஸோப் ஆகிறதாம். மர நெய் (vegetable ghee) செய்கிறார்களாம். கொஞ்சம் கசண்டாயிருக்கிறது இன்ஜின் மெஷின்களுக்கு ஆகிறதாம். வாசனைத் தைலங்கள் செய்கிறார்களாம். பிண்ணாக்கு (நல்லதாயிருந்தால்) பிஸ்கோத்துலே கூட சேர்க்கலாம். (நாளான பிஸ்கோத்து புண்ணாக்கு மாதிரிதானே யிருக்கிறது?) வயலுக்கு எரு ஆகிறது. ஆடு மாடு பன்றிகளுக்குத் தீனி. அவைகள் நன்றாகக் கொழுத்தால் அதன் மாமிசம் டப்பாவிலே வந்துவிடுகிறதாம். அவர்கள் வயலும் நன்றாக விளைவு கொடுக்கிறது. இன்னும் என்னென்ன பண்ணுகிறார்களோ தெரியாது. கிராம அபிவிருத்தி பண்ணவேணும், பண்ணவேணும் என்று கவலைப்படற நமது சர்க்கார் கிராமங்களில் என்ன என்ன மூல விளை பொருள்கள் வெளியே போகின்றன, அவைகளை எப்படி நாமே உபயோகம் செய்யலாம் என்று ஆராய்ச்சி செய்து காண்பித்தால் நமக்கெல்லாம் உபகாரமாயிருக்காதா? இந்த ஆராய்ச்சிக்கு காசு செலவழித்தாலும் பின்னால் நன்மை உண்டாகும். சாமான்களும் மலிவாகக் கிடைக்கும். நம்மூர்க்காரர்களுக்கும் வேலை உண்டு. ஞானமும் விருத்தியாகும். காட்டுப்புல்கள் வருஷா வருஷம் மலைகளிலேயும் காட்டிலேயும் எரிந்து போகிறதே. நம்ம ஊர்களிலே இருக்கிற வாழை மரங்கள், பூ, பட்டை, நார் எல்லாம் சோதனை பண்ணி ஏதாவது பணம் பண்ண முடியுமா என்றுபார்க்கலாம். இப்போது இதெல்லாம் வீணாகத்தானே பூமியிலே கிடங்குகளில் வெட்டி எறிகிறோம். இவைகளை உபயோகித்துக்கொள்ள ஒரு வழியைக் கண்டு பிடிக்காமல் ரேடியோ, எலெக்டிரிக் லைட், எல்லாம் கிராமத்துக்கு வந்தால் நமக்கு லாபம் உண்டா? இவைகளை அனுபவிக்க கிராமங்களில் மனுஷர்கள் தான் நிறைய இருக்கிறார்களா? என்னமோ இந்த வேடிக்கைகளிலே நம் தரித்திரம் தீருமா?"

"மேலே சொல்லுங்கோ தாத்தா! நீங்கள் சொல்லுகிறதைப் பார்த்தால் பழைய கர்நாடகத்துக்கு வந்துவிட்டது. 'மண் பானையிலே சமை. விளக்கெண்ணெய் விளக்கு வைத்துக்கொண்டு திரியைப் போட்டு தூண்டிக்கொண்டிரு. முரட்டுக் கதர்த்துணி கட்டிக்கொள்' என்றுசொல்லுகிறீர்கள். அதற்கு மேலே?"

"ஏண்டா! நான் சொல்லுகிறது ஒங்களுக்குப் பிடிக்கவில்லை போலிருக்கிறது. நாம் தான் புது நாகரீகத்தில் நடந்து (பழைய கர்நாடகத்தை விட்டு) இந்த நிர்க்கதிக்கு வந்து பார்த்தாச்சே. இனிமேலாவது, இந்தப் புது மோஸ்தர் நமக்கு சரிப்படவில்லை என்று தெரிந்தும், பழைய கர்நாடகமே மேல் என்று அனுபவத்திலே பார்த்திருந்தும் இதுவரைக்கும் நாம் நடத்திய வழி தப்பு என்றுதோன்றிய பிறகும் எந்த இடத்தில் விட்டோமோ அங்கேயிருந்து வேறுவழி பார்ப்போமே?"

---

# சில சீர்கேடுகள்

(டாக்டர் டி. எஸ். ரமணி)

பல கிராமங்களில் கண்டதை மறவாமலிருக்க அவ்வப்போது ஒரு குறிப்பு எடுத்துக் கொண்டு வந்தேன். முடிவில் வாசித்துப் பார்த்த போது எனக்கு உண்டான வேதனையையும் மனக் குறையையும் நீங்களும் உணர வேண்டி அக்குறிப்புகளை தெரிவிக்கிறேன்.

1. **சீத்துத் தட்டிகள்**:—கிராமத்தில் ஒவ்வொரு வீட்டிலும் காணலாம். சில வீடுகளில் மூங்கில் பாயால் செய்த தட்டிகளிருக்கும். வராண்டாவிலாவது, வீட்டிற்குள் தாவாரம் முழுவதிலுமாவது கட்டப்பட்டிருக்கும். இந்தத் தட்டிகளை மடக்கி அல்லது சுருட்டிக் கட்ட முடியாது. ஏன் இப்படித் தட்டியை வைத்து காற்றையும் வெளிச்சத்தையும் மறைக்க வேண்டும் என்று ஒருவரைக் கேட்டேன். திண்ணையில் நாய் வந்து அசுத்தம் செய்யாமலிருக்கவும், முற்றத்தின் வழியாக காக்கைகள் வராமலிருப்பதற்காகவும் இப்படிச் செய்ய வேண்டியிருக்கிறது என்றார். மேலும் ராத்திரி வேளையிலும் குளிர் மட்டு என்றார். அவர் சொன்னது சரியோ தப்போ விசாரிக்க வேண்டியதில்லை. நல்ல காற்று சூரிய வெளிச்சம் இரண்டும் தடைப் படுவதைத்தான் நான் பார்த்தேன்.

2. **மாட்டுக் கொட்டில்**:—இவை அநேகமாக வீடுகளுக்கு எதிரடி மனையிலோ அல்லது பக்கத்து மனையிலோ கட்டப் பட்டிருந்தன. காற்று வீசும் போது அநேக வீடுகளில் கொட்டில்களின் துர்நாற்றம் கலந்து வந்து கொண்டிருந்ததைக் கண்டேன்.

3. **மாட்டுத் தொட்டிகள்**:—இவை அநேகமாக கொட்டில் களிலிருக்கும். சில வீடுகளில் வீட்டு முற்றத்திலேயே வைக்கப் பட்டிருந்தன. இவைகளிலிருந்து துர்நாற்றம் வீட்டிற்குள் அடிக்கடி வீசும்.

4. **குதிர்களும் பத்தாயங்களும்**:—வீடுகளில் எந்த இடங்கள் சற்று விசாலமாயிருக்கின்றனவோ அந்த இடங்களில் இவைகளைக் காணலாம். தட்டி மறைப்புகளினுல் வெளிச்சமும் காற்றும் குறைவு என்றால், இவைகளினுல் முழுதும் தடைப்படுகிறது. மேலும் சில வீடுகளில் ஸ்திரீகள் மறைவாகத் தங்குவதற்கு முக்கியமான இடங்களாக யிருக்கின்றன.

5. **ஓடாத சாக்கடைகள்**:—இதை அநேகமாக எல்லா வீடுகளிலும் காணலாம். எலிகளும் பெருச்சாளிகளும் மண்ணைக் குவித்து நன்ருக அடைத்து விடுகின்றன. இதனுல் வீட்டின் இரண்டாவது கட்டில் எப்போதும் ஜலம் தங்கின படியே யிருக்கும். கிருமிகள் இந்தச் சாக்கடைகளில் நெளிந்து கொண்டிருப்பதை சாதாரணமாகக் காணலாம்.

6. **வீட்டுக் கிணறு**:-இது அநேகமாக வீட்டு கொல்லைகளில் அமைக்கப் பட்டிருக்கின்றது. தனவந்தர் வீடுகளில் இதிலிருந்து வீட்டிற்குக் குழாய்கள் கூட வைத்திருக்கிறார்கள். ஆனல், 40 அடி நீளம் 40 அடி அகலம் கொல்லைப் புறத்தில், ஒரு புறம் பசுமாடு கட்டத் தாழ்வாரமும், மற்றொரு பக்கத்தில் சாக்கடையும் இருக்கும். இதன் பக்கத்தில் நான்கு ஐந்து வாழை மரங்கள் செழிப்பாக வளர்ந்திருக்கும். ஸ்நானம் செய்யும் தண்ணீர், சாக்கடை ஜலம், மாட்டு மூத்திரம் எல்லாம் இந்த வாழைக்கு உரம். இவ்வித சுற்று எல்லைக்குள் வீட்டுக் கிணறு அமைக்கப் பட்டிருக்கும். அநேகம் வீடுகளில் இந்த கிணறுக்கு தலைமூடுகூடக் கிடையாது. தினப்படியே பக்கத்திலிருக்கும் அசுத்தம் இந்த கிணற்றைப் பாதிக்கும்; மழை காலத்தில் சொல்ல வேண்டியதில்லை. இந்த கிணற்றின் ஜலம் தான் குடிக்கும் தண்ணீராக உபயோகப்படுகிறது.

7. **மச்சுகளும் வௌவால்களும்**:—அநேகமாக மச்சுகள் இல்லாத வீடுகள் கிடையாது. வீடுகளில் உள்ள அதிகப்படிப் பாத்திரங்களை இவைகளில் போட்டு

வைத்திருப்பார்கள். மச்சுகளில் ஏறிப் பார்த்தால் ஒரே இருட்டுதான். மேலும் வௌவால்கள் ஓடுகளிலிருந்து தொங்கிக் கொண்டிருக்கும். இவை எச்சமிடுவதை மச்சு முழுவதும் காணலாம். காற்று வீசி அடிக்கும்போது இதன் வெடிப்பான துர்நாற்றத்தை வீட்டினுள் காணலாம். மேலும் மச்சுகள் பூமிமட்டத்திலிருந்து 8 அல்லது 8½ அடி உயரத்திற்குள்ளாகவே போடப்பட்டிருக்கின்றன.

8. கக்கூஸ்கள்:—இவைகள் கிராமங்களில் கிடையாது. தெருப் பக்கங்களும், வீட்டுச் சாக்கடைகளும் சிறுவர்களுக்கு மலஜலம் கழிக்கும் இடங்கள். மறுபடியும் சுத்தம் செய்வது என்பது கிடையாது. மேலே குப்பைகளைப் போடுவது தான் இவைகளை மூடுவதற்கு சாதாரணமாகக் கையாளும் முறை.

9. குப்பை மேடுகளும் எருக் குழிகளும்:—வீட்டிற்காக ஒரு இடமும் மாட்டுக் கொட்டிலுக்காக வேறு ஒரு இடமுமிருக்கும். மழை காலத்தில் தண்ணீர் தங்கும்போது, கொசுக்கள் உற்பத்தியாக நல்ல இடம். வீட்டுச் சாம்பலை பல இடங்களில் கொட்டுவதைக் காணலாம். பக்கத்து பாழும் மனை, வாசல்களில் பக்கத்து வேலியடிகள், கொல்லைப்புறம் கிணற்றின் பக்கத்திலுள்ள வாழை மரத்தடி, இந்த இடங்களிலெல்லாம் சாம்பல் கொட்டுவதை சாதாரணமாகக் காணலாம்.

10. சுவர்களும் ஓட்டடைகளும்:—கல் சுவர் வீடுகள் தான் அதிகம். ஓரக் கால்களில் சில வீடுகளில் வங்கு வளைகளைக் காணலாம். எலிகளும் பாம்புகளும் இவ்வளைகளிலிருந்து வெளிக்கிளம்பி குடியிருக்கும் மனிதனுக்குக் கஷ்டத்தைக் கொடுப்பது சாதாரணம். வருஷத்திற்கு ஒரு முறைதான், சங்கராந்தியின் போது, ஓட்டடை அடிப்பது வழக்கம். ஆகையால் ஓட்டடையில்லாத வீடு காணமுடியாது.

11. கிராம பம்பு:—இது சில கிராமங்களிலும் குடியானவர் தெருக்களிலும் சேரிகளிலும், பஞ்சாயத்து போர்டாராலும், லோகல் பண்டாராலும் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் எல்லா ஜனங்களும் இந்த பம்பு நீரை உபயோகிப்பதில்லை. தெருக் கோடியில்போய் ஜலம் கொண்டு வருவதை முடியாத காரியமாக எண்ணி பக்கத்திலிருக்கும் அசுத்தக் குட்டைகளில் ஜலம் எடுப்பதைக் காணலாம்.

12. கிராமக் கிணறு:—இது ஜல வசதிக்காக பல இடங்களில் காணலாம். இவைகளில் ஜலம் எடுப்பவர்களைத்தான் காண முடியாது. சில இடங்களில் இவை இடிந்து கிடக்கின்றன. வேறு சில இடங்களில் மட்டை முதலியவைகள் ஊறப் போட உபயோகப்படுகின்றன. வருஷத்திற்கு ஒரு முறை தூரு எடுத்துத் தண்ணீர் இறைத்து சுத்தமாக வைக்கப்பட்டிருக்கும் கிணறுகள் மிகவும் சில. பல சேரிகளிலும் குடியானத் தெருக்களிலும் கட்டப்பட்டிருக்கும் இந்தக் கிணறுகளை, உபயோகப் படுத்தாமல் பாழடையவைப்பது வருந்தத் தக்கது. கைவசதியாகயிருக்கும் குட்டைகளை ஜனங்கள் உபயோகித்துக்கொண்டு வருகிறார்கள். இது அறியாமையால் என்று சொல்லவும் முடியாது. சௌகரியம் என்ற பெயரை வைத்துக் கொண்டு ஏற்படும் சோம்பேறித் தனத்தால் தான் இது.

13. குளக்கரை நதியோரம்:—முக்கியமாக கிராமங்களிலுள்ள பெரியவர்கள் மல ஜலம் கழிக்கும் இடங்களில் இது ஒன்று. பக்கத்தில் சுத்தம் செய்துகொள்ள ஜல வசதியிருப்பதால் இவ்விதம் அசுத்தம் செய்ய இவர்கள் தயங்குவது இல்லை. காற்று அடிக்கும்போதும் மழை பெய்யும் போதும் இந்த அசுத்தங்கள் குளத்திலோ ஆற்றிலோபோய் விழுகின்றன. குடி தண்ணீரும் இந்தக் குளம் ஆறுகளிலிருந்துதான் எடுக்கப்படுகின்றன.

14. குளங்கள்:— பிரத்தியேகமாக குடி ஜலத்திற்குமட்டும் என்று காவல் போட்டு வைத்திருக்கும் கிராமக் குளத்தை நான் பார்த்ததில்லை. ஸ்நானம்செய்வது; ஆடுமாடுகள் இறக்குவது; பிறகு இதே ஜலத்தை குடி தண்ணீராக உபயோகப் படுத்துவது. இதுதான் நடைமுதல் பழக்கம். இது எங்கும் காணப்படும் சம்பவம்.

15. இதர விஷயங்கள்:—இவைகளைத் தவிர—கரப்பு பூச்சிகள் அடைந்த அலமாரிகள், வீட்டிற்குள்ளேயே ஆடுமாடு கட்டுவது, முதலியவைகளைக் காணலாம்.

நண்பர்களே, குற்றங்கள் கண்டு பிடிப்பதும், குற்றங்களையேபற்றி அடிக்கடி

(48-ம் பக்கம் பார்க்க)

# பழைய நினைவுகள்

(ஸ்ரீ கி. பி. நாகராஜன்)

இன்று அவள் இறந்து ஒரு வருஷம் ஆகிறது. கடைசியாகச் செய்ய வேண்டிய வருஷச் சடங்கும் இன்று பகலோடு முடிந்துவிட்டது. பகல் முழுவதும் சடங்கில் ஈடுபட்டிருந்த எனக்குத் தனிமையில்லாததால் அவளைப் பற்றிய நினைவு ஒரு பக்கமாகவே தலையெடுக்காமல் இருந்தது. ஆனால் இப்பொழுது—இரவு—படுக்கையில் இருக்கும்போது பழைய நினைவுகள் ஒன்றன்மேல் ஒன்று வந்து குவிகின்றன. அவளுடைய சிரித்த முகம்—இரண்டு கரைகளையும் தொட்டுக்கொண்டு கம்பீரமாகப் போகும் ஆற்று பிரவாகத்தில் உண்டாகும் சுழலைப்போல் குழிந்த கன்னத்தை உடைய அவள் முகம்—என் முன் அடிக்கடி தோன்றுகிறது.

எங்கள் விவாகம் ஐந்து வருஷத்திற்கு முன்பு நடந்தது. அது ஒரு காதல் மணமல்ல. அவள் தகப்பனார் ஜாதகம் கொண்டு வந்தார். அது சரியாக இருந்ததால் என் தாயாரும் நானும் போய் பெண்ணைப் பார்த்த பிறகு கலியாணம் நிச்சயம் செய்யப்பட்டது. சாதாரணமாக இருந்தாலும் இதுதான் எங்களுடைய மனமொத்த வாழ்க்கைக்கு அஸ்திவாரம், எங்கள் வாழ்க்கை காதல் மண வாழ்க்கையைக் காட்டிலும் மிகவும் அன்னியோன்னியமாக இருந்தது.

முதல் முதலாகத் தனிமையில் அவளோடு பேசியது தீபாவளியின்போதுதான். எவ்வளவு நேரம் பேசினோமோ எனக்குத் தெரியாது. பேச்சும் அநேகமாக அசட்டுத்தனமாகத்தான் இருந்தது. ஆனால் அந்த அசட்டுப் பேச்சுதான் அப்பொழுது ஆனந்தத்தின் உச்ச நிலையாக இருந்தது. நேரம் கழிந்ததே ஒழிய எங்கள் பேச்சு முடியவில்லை. அவளுடைய தம்பி "உன்னை அம்மா கூப்பிடுகிறாள்" என்று சொன்னபோதுதான் வெகு நேரம் பேசிக்கொண்டிருந்து விட்டோம் என்று தெரிந்தது.

இரண்டு மாதங்களுக்குப் பிறகு அவளுடைய தகப்பனார் இங்கே அவளை அழைத்து வந்தார். அது முதல்தான் எங்கள் இல் வாழ்க்கை ஆரம்பமாயிற்று. அது இவ்வளவு சீக்கிரம் முடியுமென்று ஒருவரும் எதிர் பார்க்கவில்லை. கொஞ்ச காலமே இந்த வாழ்க்கை நீடித்த போதிலும் அது இன்பத்தின் சிகரமாகவே இருந்தது.

இப்படிப்பட்ட எங்கள் வாழ்க்கையின் காலம் மூன்று வருஷம்தான். ஏதோ ஒரு உறவினருக்குக் கலியாணம் என்று, அவள் ஊருக்கு அழைத்துச் செல்லப்பட்டாள். அந்தப் பிரிவு எங்களை எப்பொழுதுமே பிரித்துவிட்டது. அவள் சீக்கிரம் திரும்பி வருவாள் என்று எதிர் பார்த்தேன். ஆனால், பெண்ணை விட்டு அதிக காலம் பிரிந்து இருந்ததனால் இன்னும் சில நாட்கள் அங்கேயே வைத்திருந்துவிட்டு அனுப்புவதாக அவள் தகப்பனார் சொன்னார்.

அவளைப் பிரிந்ததிலிருந்து மனது சரியாகவே இல்லை. எதைப் பார்த்தாலும் வெறுப்பாகவே இருந்தது. அது அவள் பிரிவினால் ஏற்பட்டதோ அல்லது பின்வரும் பெரிய துக்கத்தின் அறிகுறியோ ? ஆனால் அவளிடமிருந்து வரும் கடிதங்கள் பாலைவனத்தின் நடுவிலிருக்கும் நீர்நிலைகள்போல் சந்தோஷத்தைக் கொடுத்தன. அப்படிப்பட்ட ஒரு கடிதத்திற்குத்தான் அப்பொழுது பதில் எழுதிக்கொண்டிருந்தேன். கடிதம் என் முன் மேஜை மேல் கிடந்தது. அதில் என்னைப் பிரிந்து நான்கு மாதங்கள் கழிந்துவிட்டபடியால் ஏதாவது சாக்குச் சொல்லியாவது திரும்பி விடுவதாக எழுதி யிருந்தது. அதற்குத்தான் பதில் எழுதிக்கொண்டிருந்தேன். அப்பொழுது வாசலில் "ஸார், டெலகிராம்" என்ற சப்தம் கேட்டது. வாங்கிப் பிரித்துப் பார்த்தேன். "உடம்பு கவலைக்கிடமாக இருக்கிறது. சீக்கிரம் வரவும்" என்று எழுதியிருந்தது. எனக்கு என்னவாக இருக்கும் என்று ஒன்றுமே புரியவில்லை. இரண்டு நாட்களுக்கு முன்தான் கடிதம் வந்திருக்கும்போது இப்பொழுது எப்படி உடம்பு கவலைக் கிடமாயிருக்கும் என்று நம்ப முடியவில்லை. உடனே ஒரு வாடகை மோட்டார் அமர்த்திக்கொண்டு டாக்டருடன் அங்கு போய்ச் சேர்ந்தேன்.

முதல் நாள் இரவு படுத்துக் கொள்ளும் போது கொஞ்சம் குளிர் எடுத்ததாம். அதைப் பொருட்படுத்தாமல் காலையில் பார்த்துக் கொள்ளலாம் என்று இருந்துவிட்டார்களாம். காலையில் அந்த ஊரிலிருந்த ஒரு நாட்டு வைத்தியரிடம் காண்பித்தார்களாம். அவர் ஏதோ மருந்து கொடுத்தாராம். ஆனால் அதில் ஒரு பிரயோஜனமும் இல்லை. சாயந்தி[illegible]குள்ளாக ஜன்னி பிறந்துவிட்டது. நானும

டாக்டரும் இருட்டும் சமயத்திற்குப் போய்ச் சேர்ந்தோம். டாக்டர் ஒன்றும் சரியாகச் சொல்லவில்லை. இருந்தாலும் ஏதோ வைத்தியம் செய்தார். அதில் ஒரு குணமும் ஏற்படவில்லை. கடைசியில் அவரே பிரயோஜன மற்றது என்று நம்பிக்கையை விட்டார். அவளும் அன்றிரவே உயிர் நீத்தாள்.

எனக்குத் தந்தி வந்ததிலிருந்தே மனம் சரியாக இல்லை. இப்பொழுது அது முற்றிலும் பைத்தியம் பிடித்தாற்போல் ஆகிவிட்டது. தனிமையில் இருந்து அழுதேன். என்ன செய்கிறேன் என்று தெரியாமல் புரோகிதர் சொல்லியபடி ஈமக்கடன்களை முடித்துக் கொண்டு ஊர் திரும்பினேன்.

இந்த வருஷம் முழுவதும் அவள் நினைவு தான். அதுவும் தனிமையில் இருந்தால் அதைத் தவிர வேறொன்றும் மனதிற்கு வருவதில்லை. என் விஷயத்தையும் அவள் சம்பந்தமாகவே மனம் எண்ணிற்று. ஒரு நாள் குளத்தங்கரைப் படித்துறையில் உட்கார்ந்திருந்தேன். மனம் ஒரு நியதி இல்லாமல் நினைவுப்பாதையில் சென்று கொண்டிருந்தது. பழைய நினைவுகள் மனதில் நிரம்பிக்கிடந்தன. எங்கள் கழிந்த வாழ்க்கையை, சுற்றிலும்இருக்கும் உலகை மறந்து எண்ணமிட்டுக்கொண்டிருந்தேன். சட்டென்று உதட்டில் ஒரு ஈர உணர்ச்சி ஏற்பட்டது. அவளையே நினைத்துக் கொண்டிருந்த எனக்கு அது அவள் இதழின் ஈரம்தானோ என்று தோன்றியது. உடனே கண் விழித்துப் பார்த்தேன். சீ! என்ன ஏமாற்றம்! கரையில் மோதின அலையிலிருந்து சிதறின நீர்த்துளி தான் அப்படி என்னை ஏமாற்றியது.

மற்றொரு நாள் தனிமையில் ஒரு மரத்தடியில் உட்கார்ந்திருந்தேன். அதே எண்ணம்; அதே நினைவு. உலகத்தைப்பற்றிய எண்ணமே இல்லை. மனம் சிந்தனைக்கடலில் அலைபட்டுக் கொண்டிருந்தது. திடீரென்று ஏதோ கன்னத்தை மெதுவாகத் தடவுகிறதுபோல் ஒரு உணர்ச்சி. மறுபடியும் அவள் நினைவு. அவள் தலைமயிர்தானோ இப்படி கன்னத்தில் உராய்கிறது என்ற எண்ணம். உடனே கண் விழித்துப் பார்த்தேன். மறுபடியும் அந்த ஏமாற்றம் தான். தூரத்தில் மரத்திலிருந்து உதிர்ந்த சருகு என் கன்னத்தில் உராய்ந்து விட்டுப் பறந்து கொண்டிருந்தது.

இப்படியாக இந்த வருஷம் முழுவதும் அவள் நினைவாகவே சென்றுவிட்டது. இன்னும் அந்த நினைவு போகவில்லை. என்ன முயற்சித்தாலும் அதை அப்புறப்படுத்த முடியவில்லை. மறுபடியும் அவளுடைய அன்பினால் தான் அது முடியும்போல் இருக்கிறது. ஆனால் அது இனிமேல் எங்கே இருந்து கிடைக்கும்?

---

(46-ம் பக்கத் தொடர்ச்சி)

எழுதுவதும் விரும்பத் தக்கதல்ல. ஆனால் குறைகளை எடுத்துச் சொல்லாவிட்டால் எப்படி முன்னேற முடியும்? ஒவ்வொரு கிராமத்திலும் இந்தப் பதினைந்து அட்டூழியங்களும் இன்னும் மேலும் காணலாம். ஆரோக்கிய வாழ்வுக்கு அடிப்படை அஸ்திவாரக்கல் நல்ல காற்று; சுத்தமான தண்ணீர். காற்றையும் தண்ணீரையும் இப்படி அசுத்தம் செய்துவிட்டு, இரண்டு வேளைக்கு பதிலாக ஆறு வேளை சாப்பிட்டால் உடம்பு எப்படி புஷ்டியாக இருக்கும்? முடியாது.

ஒரு சங்கிலியைக் கொடுத்து அதன் பலம் எவ்வளவு என்று கேட்டால், அதன் கரணைகள் எல்லாம் வலுவாக இருந்து நடுவில் ஒரு கரணை மாத்திரம் நைந்து இருந்தால், நைந்த கரணையின் பலம்தான் சங்கிலியின் [illegible]ம். அதே விதம் நல்ல [illegible]மும் தேகப் பயிற்சி விளையாட்டு இடங்களும் மாத்திரம் போதாது. ஒவ்வொரு நிமிஷமும் நாம் சுவாசிக்கும் காற்றையும் குடிக்கும் தண்ணீரையும் இப்படி அசுத்தம் செய்கிறோம். இவ்விதம் செய்வதால் தேக திடத்தைக் காப்பாற்ற முடியாது.

எந்த முன்னேற்றத்திற்கும் முதலில் தேகத்தைத் திடமாக வைத்துக்கொள்ள வேண்டும். தேக திடமும் மனோ திடமுமில்லாமல் ஒரு துறையிலும் முன்னேற முடியாது. கிராம முன்னேற்றத்தைப் பற்றித் திட்டம் போடும்போது கிராமத்திலுள்ளவர்களை திடகாத்திரர்களாகச் செய்ய வேண்டியது முதல் திட்டமாகும். மேலே கண்ட குறைகளை நிவர்த்திக்க வெளியிலிருந்து உதவி வேண்டியதில்லை. நாமாக நிவர்த்தித்துக்கொள்ள வேண்டியவை. மேலும் முக்கியமாகக் கவனிக்க வேண்டியவை.

# ராட்டினம்

ஆசிரியர் :
(ஸ்ரீ மஞ்சேரி ஸ. ஈச்வரன்)

தமிழில் எழுதியது :
(ஸ்ரீ வே. ராகவன்)

"இன்னும் ஒரு 'டிராம்'" என்று ரத்தினம் சொல்லும்போதே அந்த வார்த்தைகளில் ஏற்பட்ட ஸங்கதிகள் ரத்தினம் போடப்போகும் பட்டை அரக்கு அத்துடன் ஆறும் தடவை என்பதைத் தெரிவித்தன. ஒரு தரம் மீசையை இருபக்கமும் துடைத்துக் கொண்டான்; நாக்கை 'சப்' கொட்டினான்; ஒட்டைச் சிவிங்குக்குத் தலை நீளுவதுபோல் கண்ணாடி டம்ளரோடு கூடிய அவன் கை நீண்டது. கேட்காத போதே உபசாரம் செய்யும் உதார கள்ளுக்கடைக்காரன் கங்காரு பாய்வது போல் பாய்ந்து, ரத்தினத்தின் தாஹ சாந்திக்கு வேண்டியதை வார்த்தான்.

இப்படி பட்டை அரக்கு போட்ட ரத்தினத்திற்கு வயது நாற்பதுக்கு சமீபம்; அவன் அரையில் வெளுத்த வேஷ்டியும், மேலே மாலை மேகம் போன்ற வர்ணத்தில் ஒரு பட்டுச் சட்டையும் இருந்தன. அரை வழுக்கையான தலை, உடைந்துபோன குடிக்கும் கலயத்தின் ஓடுபோலக் கிடந்தது. மேலுதட்டிற்கு மேல் ஒரு சிறு மீசைக்காடு; அதற்கு மேல் சிறிதான மூக்குக் குன்றம்.

ஒரே வாயாய் ஆறுவது ஆவர்த்தத்தை முடித்துக்கொண்டு, ஒரு கனைப்புக் கனைத்து, நாக்கையும் ஒருதரம் 'சப்' கொட்டிவிட்டு, டேபிளின்மேல் 'பொத்' என்று கிளாஸ் டம்ளரை வைத்துவிட்டு, இரண்டு ரூபாய்களை கடைக்காரனிடம் ரத்தினம் வீச, அவன் பாக்கி ஐந்து அணாக்களை ரத்தினத்திடம் வீசினான்.

ரத்தினம் கடையைவிட்டு வெளி வந்தான்; என்னகதி பேதங்கள்! சில சமயங்களில் அடிக்காலாலும், மறு சமயங்களில் நுனிக்காலாலும், இப்படியாக பல வகை அடவுகளுடன் ரோடில் ரத்தினம் பிரவேசம் செய்தான்.

ரோட்டில் தன் மனைவியையும் தன் மகளையும் சந்தித்தான். "மங்கி" என்றான் ரத்தினம். அவர்களுடைய குழந்தைகூடப் பேசாத மழலையில் பேச ஆரம்பித்தான்.

மங்கி, உடம்பில் சதைப்பற்றெல்லாம் உலர்ந்துபோய் நிற்கும் எலும்பு விக்ரஹம்; அவளிடமிருந்த யௌவனமும், தள தளப்பும் வத்திப்போய் வெகு காலமாய் விட்டதென்று நன்றாய் விளங்கிற்று. ஒன்பது வருஷங்களுக்குமுன் மங்கி ஒரு வருஷ காலம் இன்பமென்பதை ருசி பார்த்தாள்; தாயாரின் ஆனந்தத்தை அப்பொழுது ஒருதரம் கண்டவள். அத்துடன் முடிந்தது அவளது வஸந்த காலம்.

தன் கணவன் ஆடிக்கொண்டுவந்து கள் மழலை பேசியதும், செம்பருத்தியோவென சிவந்தாள் மங்கி. "இன்றைக்குக் குடிப்பதில்லை என்று சத்தியம் சொன்னாயே" என்று கடிந்தாள் தன் கணவனை நோக்கி. நல்ல மத்யான வேளை. சூரிய வெப்பம் தாங்காதபோது "ஏன் மங்கி! பனியடிக்கிறாப்பொலே இருக்கே" என்றான் ரத்தினம்.

"தம் புள்ளை பாக்கவா ஒத்தங் குடிப்பான்? அதுவும் இன்னிக்குக் கோவில்லே திருவிழா; அதுக்குப் போயிண்டுருக்கச்சே ஒத்தன் இப்படிக் குடிக்கலாமா?"

"மங்கி, ஒரு சொட்டு, இதோபார், ஒரு 'டிராப்'தானே; கொஞ்சம், தொண்டையை நினைச்சுண்டேன்."

சொட்டென்றால் ரத்தினத்தின் அளவில் எவ்வளவு என்று மங்கிக்குத் தெரியுமாதலால் "வெட்கமில்லே!" என்று மேலும் கத்தினாள்.

"ஷோக்கா நம்ப தோஸ்த்து எல்லாரும் கூப்படறபோது மாட்டேன்னு எப்படிச் சொல்றது?"

"அவங்களுக்கும் நீயா பணம் கொடுத்தே?"

"ஆமாம்; ஒரு நா அவன் வாங்கிக் கொடுக்கறது, ஒரு நா நான்; இப்படித் தான்."

"சரி, சரி, ரோடு இது. நம்ப வீடு இல்லே. ஒழுங்கா வா."

ரத்தினத்தின் பர்ணசாலையிலிருந்து கபாலி கோயிலுக்கு ஒரு மைல். கபாலி கோயிலில் உத்ஸவம்; அன்று அறுபத்து மூவர். கூட்டம் தாளாத நாள். சிவனடியார்கள் அன்று ஊர்வலம் வந்து எவ்வளவு தாழ்மையா யிருப்போரையும் அருள் பெறச் செய்து போகும் நாள்.

ரத்தினம் ஒரு சிறு கடை வைத்திருப்பவன்; ஒரு சமயம் பெரிய 'ஷாப்' ஆக இருந்த கடை. 'குடி' 'குதிரை' முதலிய 'குகாரங்களில்' விழுந்த ரத்தினத்தின் 'ஷாப்' நாளடைவில் பட்டாணியும் பழஞ் சோடாவும் விற்கும் கடையாய் போய் விட்டது. அன்று காலை "ஏதோ வேலையிருக்கு எனக்கு; நான் சோறு தின்ன வராவிட்டால், அந்த கட்டைத்தொட்டியிடம் சோமுவே இட்டுண்டு வந்து நில்லு; அங்கேந்து சேந்து அறுவத்து மூவருக்குப் போலாம்" என்று சொல்லி விட்டு மறைந்தவன் ரத்தினம். 'கட்டைத் தொட்டி' என்பதற்கு 'பட்டையரக்கு ஷாப்' என்று அர்த்தம் என்பது தெரியும் மங்கிக்கு. அவள் மனம் கலங்கிற்று. "இன்னிக்கு வேண்டாமே, திருவிழா. கோவிலுக்குப் போறோம்" என்று நயந்த மனைவியை, "சாமிக்குத் திருவிழாகா, நாம்ப சாப்படாம இருப்பானே" என்று சொல்லிவிட்டு மறைந்த ரத்தினத்தைக் கட்டைத் தொட்டியிடம் சந்தித்து திருவிழாவிற்கு இழுத்துச் செல்ல முயன்றாள் மங்கி.

நடக்க நடக்கக் கூட்டம் நெருக்கிற்று. ரோடுகளில், வழியிலுள்ள தண்ணீர்ப் பந்தலில் குழந்தை சோமுவுக்கு நீர் மோரை வாங்கிக் கொடுத்துக்கொண்டு நடுவே நடுவே நின்றுவிடும் கணவனை இழுத்துக்கொண்டு வந்தாள் மங்கி.

"கைலே ஏதாவது துட்டு கிட்டு வச்சுண்டுருக்கயோ?" என்றான் திடீரென்று ரத்தினம். மங்கி கோபித்தவளாய் மௌனமாயிருந்தாள்.

"எனக்கொண்ணு நீ வாரி விட்டே வாண்டாம்; அதுக்குக் கேக்கல்லே. இந்தப்பயல் திருநாள்ளே அதுவேணும் இது வேணும்னு கத்தப் போறான்; அதைப் பாத்துக்கோ நீ யென்னு சொல்ல ஆரம்பிச்சேன்."

"காசேது, கீசேது. தம்படிக்குக் கூட இன்னிக்குக் கடலே விக்கல்லே. பட்டாணி, பப்பரமுட்டு, ஒண்ணும் விக்கல்லே."

"தம்படி, பைசா, பட்டாணி, பப்பரமுட்டு, சீ" என்றான் ரத்தினம். ஒரு சமயம் அவன் 'ஐஸ்-விம்டோ'வும், 'மில்க்-ஸிரப்'பும், நியூஸ் பேபரும் விற்றுக்கொண்டு செய்து வந்த ஸம்பாத்யங்களெல்லாம் அவன் நினைவுக்கு வந்தன.

"எல்லாம் நீயாத் தொலச்சுண்டது தானே! வீடு, என் நகை எல்லாம் மார்வாடி கிட்ட வச்சாச்சு. இன்னம் அந்த குடி,..."

"சீ, சும்மா இருக்கயா இல்லயா, ஒன்னெத்தான் கேட்டா" என்று ரத்தினம் பாய்ந்தான். சில நாள் மாலை அவன் வீட்டினுள் புகுந்து தன்னை அடிக்கும்போது எப்படி மாறுமோ அது போல் மாறிற்று அவனுடைய முகம்.

"ரோட்டில் சண்டையேன்?" என்று நயந்து கொண்டு சென்றாள் மங்கி.

## 2

பிராடிஸ் ரோட்டென்னும் சிறு குழாய் 'லஸ்' என்ற ஏரியிலிருந்து ஜனங்களை எடுத்தெடுத்து கோவிலின் மாட வீதிகளில் கக்கிக் கொண்டிருந்தது. பொம்மைகள், கடுதாசுத் தம்பட்டங்கள், ஊதல்கள், பட்டாணி, மிட்டாய், பேரீச்சம் பழம், ஒரு பக்கம். நகங்களை ஆலம் விழுதாய் வளர்த்து அதையே கங்கணமாயும் மாலையாயும் கையிலும் கழுத்திலும் சுற்றிப் போட்டுக்கொண்டு, இரண்டு சீடர்களோடு, முள்ளுகளின் மேல் வீற்றிருக்கும் மஹாத்மா ஒருவர். நன்றாயிருக்கும் குழந்தையின் காலைப் பின் புறமாய்க் கட்டிவிட்டு, இரு முழங்காலிலும் ஏதோ வைத்துக் கட்டி அம் 'முட'க் குழந்தையைக் காட்டி தம்பிடிகளைக் கேட்கும் கிழவி யொருவள். 'பர்மீஸ் இரட்டைப் பெண்கள்" என்று விளம்பரம் கொண்ட கொட்டகை ஒன்று. பக்கத்தில் "பம்பாய் பாரு, பம்பாயிலே பார்ஸி பாரு" என்று காலணுவுக்கு ஒருவன் உலகத்தையே காண்பித்துக்கொண்டிருந்தான், இதனடியில் சற்று ரத்தினமும் மங்கியும் தயங்கினார்கள்.

பக்கத்தில் குளம்; ஹிந்துக்களேயும் முஸ்லீம்களேயும் ஒன்று படுத்தும் குளம். இதற்கு பால்யத்தில் தானும் கலந்து கொண்ட ஆலி ஊலாப் பண்டிகை முடிவில் பல வருஷங்கள் ரத்தினம் வந்த துண்டு. வருஷா வருஷம் கபாலியின் பங்குனி விழாவின் போதும் அங்கு வருவதுண்டு. குளத்திற்கப்பால் 'உயரும் சிகரக் கும்பம்' தெரிந்தது. 'என்னைப் பார்த்தே பலர் பதமடையலாம்' என்று சொல்வதுபோல் எழுந்திருந்தது கோபுரமும், கலசமும்.

அறுபத்துமூவர் இன்னும் தெற்கு மாடவீதிகூட வரவில்லே. "ரொம்ப நாழியாகும்போலிருக்கே" என்ருன் ரத்தினம். மங்கி பதில் சொல்வதற்குள், "ஆ ஆ, அதோ, ஈஈ" என்று சோமு கைதட்டிக்கொண்டு கூத்தாட ஆரம்பித்தான்.

"என்ன?" என்று மங்கி கேட்டாள்.

"அம்மா, அது" என்று சோமு பக்கத்தில் சுழலும் ராட்டினங்களேக் காட்டிஞன். சுழலும் உலகிற்கே பிரதியோ இவை என்று தோற்றுமாறு குதிரை, புலி, சிங்கம், தொட்டில், நாற்காலி முதலிய ஆஸனங்கள் அமைத்த ராட்டினம் ஒன்று சுழன்றுகொண்டிருந்தது. சிறுவர் பலர் பயந்தவராய் மிருகங்களின் மென்னியைப் பிடித்தவண்ணம் அரைப் படுக்கையாய் உட்கார்ந்திருந்தனர்; சில சிறுவர் அலக்ஷியமாய் துண்டுகளே வீசி, சிட்டியடித்தனர். ராட்டினம் சுற்ற, அதை ஒரு வலியன் நடுவே நின்று சுற்ற வைக்க, தாம் முறுக்கிய துண்டுகளால் அடிப்பதால் தான் தம் மரக்குதிரைகள் ஓடுகின்றன என்று நினேக்கும் அக்குழந்தைகள் குழந்தைகளா? நடந்துவரும் உலகை நடத்திவைப்பதாய் துடித்துக் கொண்டிருக்கும் நாம் குழந்தைகளா?

இதற்கப்பால் தலேகீழாய்ச் சுழலும் ராட்டினமொன்று. அதில் முதிர்ந்த ஆண்களும், துணிந்த யுவர்களும் ஏறி, அடித்தரையில் துண்டுகளேப் பந்தாய் சுற்றிவைத்தும், அதைக் குனிந்து எடுத்தும் களிப்படைந்துகொண்டிருந்தனர். பயிற்சியில்லாச் சிலர் இதில் ஏறி, வாயிலெடுத்துக்கொண்டு குளக்கரையை அடைவது முண்டு.

சோமுவுக்கு ராட்டினம் ஏறவேண்டுமென்று ஆசை உண்டாகிவிட்டது. காலணவை மடியின் முடிப்பிலிருந்தெடுத்துக்கொடுத்து; மங்கி, தன் மகன் சோமுவை ராட்டினத்தில் ஒரு குதிரையின்மேல் வைத்தாள். நொடியில் ராட்டினம் சுற்ற குதிரைகள் பறந்தன; மங்கி கொஞ்சம் நெருங்கிக் குழந்தையும்கண்ணுமாய் நின்ருள். சிறிது தூரத்திலிருந்து ரத்தினம் ராட்டினத்தில் பறக்கும் குதிரையும் கண்ணுமாய் நின்ருன்..

இரண்டு நிமிஷங்களாயின. "ஆ, ஆ, அதோ, ஈஈ—" என்று சிறிதுமுன் சோமு கத்தியதுபோல் கத்தினன் ரத்தினம். கையைத் தட்டிக்கொண்டுகுதித்தான். "ஆ, அதோ, மும்டாஸ் வரது பார். அள்ரதுபார், நான் சரியாத்தான் கட்டினேன்......'டிப்பு' விக்கரானும், எனக்கெதுக்கு 'டிப்பு?'...நான் கொடுப்பேனே 'டிப்பு'........புலியாட்டமானு என் குதிரை பாய்ந்து........மூணும் 'ரவுண்டு'........கௌஸு இப்ராஹிம், கோவிந்தா—இதோ அடிச்சேம் பார் 'பிரைஸ்'...'டபிள்'.........'டோடல்' 'ஈவென்ட்'...'கவர்னர்கப்' ......இதென்னடா மும்டாஸ் பின்வாங்கிடுத்து? இப்ராஹிம், ரஷீத்அடிச்சுடுத்தே...அய்யய்யோ ...தொலஞ்சுதுபோ......" உடனே தட்டென்று ஒருவன் விழும் சப்தம் கேட்டது. பலர் கூடினர்; கூக்குறல் ஏற்பட்டது. ராட்டினம் நின்றது. சோமுவை அள்ளிக்கொண்டு, மங்கி ஓடிவந்து பார்த்தாள். குதிரைபோல் நுரைத்தவாயுடன் காலேப் பிரித்துப் போட்டுக்கொண்டு ரத்தினம் விழுந்து கிடந்தான். கான்ஸ் டேபிள் ஊதினன். ரத்தினத்தைத் தூக்கிக்கொண்டு உடனே செய்யக்கூடிய சிகித்ஸையைச் செய்யும் சாரணர் ஒரு பக்கமாய் போனர்கள்.

## 3

சாரணரையும், வைத்யரையும் தாண்டிக்கொண்டு தானடையவேண்டியஉலகை ரத்தினம் இரண்டு மூன்று நாட்களில் அடைந்தான்.

* * * *

அவனுடைய சிறுகடையில் சோமுவுடன் மங்கி . வீற்றிருந்து காலக்ஷேபம் செய்து வந்தாள். மங்கியிடம் பீடி வாங்

கிப் பத்தவைத்துக்கொண்டு சிறிது தூரம் சென்று, இருவர் பேசிக்கொண்டுபோனார்கள்.

“ நான் செத்தா, குதிரேலே கொண்டு போய் கொளுத்துன்னு சொன்னான், இவ புருஷன் ரத்தினம் ” என்றான் ஒருவன். “என்ன ?” என்று மற்றொருவன் வியந்து கேட்டான்.

“ அதுமட்டுமா சொன்னான் அந்தப் பாவி? தண்ணிவிட்டுக் கழுவரத்துக்கு முன்னே ஒரு புட்டி சாராயத்தை விட்டுக்கழுவிப்போடு என் உடம்பே”ன்னான். இதைக்கேட்ட மற்றொருவன் வியப்பை விட்டு, புன்னகையை விட்டுவிட்டுத் திரும்பி வருத்தத்துடன் கடைக்குவந்து தனக்கு அவசியமில்லாமலிருந்தும் அரை ரூபாய்க்கு என்னென்னமோ பண்டங்களை சோமுவைப் பார்த்துப் பார்த்து இரங்கினவனாய் வாங்கிப்போனான்.

“ இன்னிக்கு யார் கண்லே முழிச்சோமோ, சோமு” என்றாள் மங்கி. “அம்மா” என்று கிட்டி வந்தான் சோமு. சோமுவைத் தழுவிக்கொண்டு கண்ணீர் சொரிந்தாள் மங்கி. அறுபத்துமூவரை நினைத்தாள்: “ இக் குழந்தையை அந்த வழியில் போகாமல் நீங்கதான் காப்பாத்தணும்” என்று மனதிற்குள் வேண்டிக்கொண்டாள்.

---


KHANDUR காந்தூர் — REGISTERED KHANDUR O.K. LEHYAM TRADE MARK — LEHYAM லேகியம்

**ஆரோக்கியமே நல்ல தனம்**

இந்த அருமையான லேகியம் நன்கு பரிசோதிக்கப்பட்டு சுமார் 95 வருஷ காலமாக கீழ்க்கண்ட வியாதிகளாகிய பித்த வெட்டை, சோகை, மஞ்சட்காமாலை, பாண்டு, வீக்கம், இரத்தக்குறைவு, கைகால் அசதி, உள்ளங்கை, உள்ளங்கால் எரிச்சல், பசியின்மை, தாது பலக்குறைவு, இளமையில் முதுமைபோல் தோன்றும் அகால மூப்பு, பிரசவத்துக்குப்பின் ஏற்படும் பலக்குறைவு, கண் ஒளி மங்கல், கண்மாசி பூத்தல் முதலிய வியாதிகளைப் போக்க பிரசித்திபெற்றது.

நற்பலன்பெற 48 தோலா எடையுள்ள காந்தூர் லேகியத்தை 40 நாள் சாப்பிடல்வேண்டும். “ பலன் பெருவிடில் பணம் வாபஸ் ” செய்ய உத்தரவாதம் பெற்ற இந்த ஒரே லேகியத்தை ஓர் முறை பரிட்சித்து உண்மையுணர்ந்து உங்களன்பர்கட்கு உபதேசிக்கக் கோருகிறோம்.

12 தோலா (10 நாள்) லேகியம் ... ரூ. 1 0 0
24 ,, (20 ,, ) ,, ... ரூ. 2 0 0

காந்தூர் லேகியம் டிப்போ, பம்பாய் — சென்னை — கல்கத்தா.

*Sole Agents*:—(For INDIA, BURMA, CEYLON & F. M. S.)

**நயினார்சன் அண்டு கம்பெனி,**

198, அங்கப்ப நாயக்கன் தெரு, ஜி. டி., சென்னை.

ஸ்டாக்கிஸ்ட்கள் தேவை




## பூர்வ கதை

கண்டிராக்டர் லம்போதர முதலியார் மனைவியை இழந்தவர். தன் தாயார் தேவானையம்மாளுடனும், பிள்ளை தணிகை வேலனுடனும், மருமகள் புனிதவதியுடனும் வசித்து வந்தார். புனிதவதி சிறுவயதில் பெற்றோரை இழந்தபடியால் முதலியார் அவளைக் காப்பாற்றும்படி ஆயிற்று. புனிதவதி தணிகைவேலனைக் காதலித்தாள். ஆனால் தணிகைவேலனுக்கும் புனிதவதியின் வகுப்புத் தோழியான சிவகாமிக்கும் நிச்சயதார்த்தம் நடந்தது.

புனிதம் தாங்க முடியாத துக்கம் அடைந்தாள். தன்னை தணிகு நன்றாக அறிந்து கொள்ளாமல் இப்படிக் கலியாணத்திற்குச் சம்மதித்தானே என்று மனம் புழுங்கினாள். வேதனை தாங்காமல் அன்றிரவு தற்கொலை செய்து கொள்வதென்று தீர்மானித்தாள். ஆனால் சிறிது நாழிக்கெல்லாம் அவள் முன் செய்த தீர்மானம் மறைந்தது. துயரம் வருவதெல்லாம் ஆசையால்; ஆசையால் ஆசையைக் களைந்துவிட்டால் துயரப்படவேண்டியதில்லை யல்லவா ?...என்று கேட்டுக் கொண்டாள். ஆகவே அவள் பற்றைத்துறந்த ஓர் சந்நியாசினியாகக் காலங்கழிக்கத் துணிந்தாள்.

தணிகுவுக்கும் சிவகாமிக்கும் கல்யாணம் நடந்து இரண்டு வருஷங்கள் ஆகிவிட்டன. புனிதம் மட்டும் கல்யாணம் செய்து கொள்ளாமல் துறவி வாழ்வு நடத்தினாள். தேவானையம்மாளும் சிவகாமியின் தகப்பனார் சம்பந்த முதலியாரும், எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் அவள் தீர்மானத்தை அசைக்க முடியவில்லை.

இப்படி அவள் ஐந்து வருஷங்கள் காலந் தள்ளிவிட்டாள்.

ஒரு நாள் சிவகாமிக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. அதனால் அவள் மிகவும் இளைத்து படுக்கையோடு படுக்கையாகக் கிடந்தாள். சிவகாமியின் தேகநிலை கவலைக்கிடமாயிற்று. முதலியார் எவ்வளவோ சிறந்த வைத்தியம் செய்துங்கூட கடைசியில் சிவகாமி உயிர் நீத்தாள்.

இதனால் தேவானையம்மாளுக்கு மூளை குழம்பிப் பயித்தியம் பிடித்தது. தணிகை வேலன் தந்தையைப் போல மனைவியற்றவனானான். அடிக்கடி சிவகாமியின் ஞாபகம் வந்து அவன் மனதைக் குத்தி வேதனை செய்யும். சிவகாமியின் எழில் முகம் அவன் உள்ளத்தே தோன்றி மறையும். சிவகாமி தன்னைப் பார்த்துச் சிரித்து ஏதோ கேள்வி கேட்பதுபோல அவன் கற்பனை உள்ளத்தில் ஓர் பிம்பம் தோன்றும்.

திடீரென்று தணிகை வேலனின் மனதில் ஓர் புரட்சி உண்டாயிற்று. புனிதத்தின் பேரில் அவனுக்கு ஓர் நவமான உணர்ச்சி ஏற்பட்டது. ஆனால் தன் மனதில் ஏற்பட்ட காதலை அவளிடம் எப்படித் தெரிவிப்பது என்று சங்கோஜப்பட்டான். ஒரு நாள் இரவு தைர்யத்தைக் கைவிடாமல் புனிதம் படுத்திருந்த இடத்திற்குச் சென்று தன் காதலை வெளியிட்டான். இதைக்கேட்ட புனிதம் ஆச்சர்யத்தால் கற்சிலை போலானாள். தான் கட்டியிருந்த மனக்கோட்டை இடிந்துபோய் மறுபடியும் உயிர் பெற்றுவிட்டதை நினைக்க அவள் புளகாங்கித மடைந்தாள்.

இந்த விஷயம் தேவானையம்மாளுக்குத் தெரிந்தால் அவளுக்குப் பைத்தியம் கூடத் தெளிந்துவிடும் என்று நினைத்தாள் புனிதம். தான் தணிகுவைக் கல்யாணம் செய்துகொண்டால் வீட்டில் மறுபடியும் கலகலப்பும் சந்தோஷமும் உண்டாகும் என்று எண்ணினான்.

மறுநாள் அதிகாலையில் தணிகு தேவானையம்மாளிடம் போய் “பாட்டி! புனிதம் என்னைக் கல்யாணம் செய்துகொள்ளப் போகிறாள்” என்று சொன்னான். அந்த வார்த்தையைக் கேட்டுத் திடுக்கிட்ட தேவானையம்மாள் உயிர் விட்டாள்.

## 13

### மங்களம்

"அடேடே சம்பந்தம்! நான் அப்பொழுதே நினைத்தேன் இப்படித்தான் நடக்குமென்று. எனக்கு முன்னமேயே தெரியும். அந்த மாயமாலக் கள்ளி கலியாணமே வேண்டாமென்று உட்கார்ந்திருந்த சங்கதி எல்லாம் முன்னமேயே கூட அப்படித்தானிருந்திருக்கும். அவள் தலை சாயவேண்டு மென்றுதான் தவம் செய்திருப்பாள். வேதாந்தம் பேசினாள். தலை வெந்தது; கால் வேகவில்லை. வருஷ திதி கழிந்ததோ இல்லையோ கல்யாணம். பாரேன் அந்தக் குறும்பை! இந்த மாயக் கள்ளியும் அந்தத் தடியனும் சேர்ந்து மருந்து வைத்தே கூடக் கொன்றிருப்பார்கள். இல்லாவிட்டால் அந்தத் தடிச் செறுக்கி காலாகாலத்தில் கலியாணம் செய்துகொண்டு போயிருக்கமாட்டாளா? நான் சொன்னால் சரியென்று தோன்றுது. வருஷம் திரும்புவதற்குள் இவள் 'சொக்குப் 'பொடி'யிலே மயங்கிப் போனானே. முன்னேயே கொஞ்சம் இலைமறைவு காய் மறைவு என்று இருந்திருக்கும். அவளும் ஒழிந்தாள்; அம்பலத்துக்கு வந்து விட்டது" என்று அம்மாக்கண்ணம்மாள் தெருத் திண்ணையிலிருந்தபடியே பிரசங்கம் செய்துகொண்டிருந்தாள்.

"அம்மாக்கண்ணு! நீ வாய்புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்று பேசாதே. எனக்குத் தெரியும் அவள் குணம். அப்படி மயக்குவதானால் நம் சிவகாமி கலியாணத்தின் பொழுதே அவள் புத்தி அறிந்த பெண்தானே. பணத்திலே குறைவா? பவிஷுலே குறைவா? லக்ஷ ரூபாய் சொத்து ஒரு காசா, இரண்டு காசா? அப்பொழுதே அவனுக்கே வாழ்க்கைப்பட்டிருக்க மாட்டாளா? என்னமோ தலைகால் புரியாமல் உளறுகிறாயே. அவளில்லாவிட்டால் தெரியும் குழந்தைகள் படும்பாடு. அந்த மட்டும் இவனையே கலியாணம் செய்து கொண்டாளே என்று நான் சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கிறேன். அவளுக்கு இவனைவிட உயர்வாய் வரன் வரும். லக்ஷ ரூபாயா, லேசா? இவனுக்கு நாலு குழந்தைகளிருக்க இரண்டாந்தாரமாய் எந்தப் பெரிய மனுஷன் பெண் கொடுப்பான்? எங்கிருந்தாவது ஒரு 'கசுமாலம்' தான் வந்து வாய்க்கும். நன்றாய்ச் சொன்னாய், ஒரு வார்த்தை போனால் போகிறதென்று. அந்த மாதிரிப் பெண் கிடைக்குமா? சீ! சீ! நாக்கு அழுகிப்போகும். இன்னொருதரம் அந்த மாதிரி சொன்னால் தெரியும்?" என்று மிகுந்த கோபத்துடன் கூவினார் சம்பந்த முதலியார்.

"காலேஜிலே படித்தவளாயிற்றே நீயும் மயங்கிவிட்டாய். 'தாஸ்பூஸ்'ன்னு இரண்டு படிக்கத் தெரிந்துவிட்டால் அவர்கள் சொல்லுவதெல்லாம் சத்தியம். செய்கிறதெல்லாம் உயர்வு. நீயும் ஆண்பிள்ளை தானே? அவனுக்குப் போட்ட பொடி உன் மேலே கூட கொஞ்சம் விழுந்ததாக்கும்? போதுமே உன் பவிஷு" என்றாள் அம்மாக்கண்ணு.

"போதும் அம்மாகண்ணு, நிறுத்து உன் பிரசங்கத்தை. இல்லாவிட்டால் நான் எழுந்து வெளியே போய் விடுகிறேன்" என்று சொல்லியவராய் எழுந்து வெளியே போய் விட்டார் சம்பந்த முதலியார். அம்மாக்கண்ணு தெருத்திண்ணையி லுட்கார்ந்து முணுமுணுத்துக் கொண்டிருந்தாள்.

* * *

"அத்தான்! நீங்கள் சாப்பிடுங்கள். நான் பாப்பாவைத் தூங்கவைத்துவிட்டுச் சாப்பிடுகிறேன்" என்றாள் புனிதம்,

"புனிதம்! அதை என்னிடம் விட்டுவிடு. நான் பார்த்துக்கொள்கிறேன். நீ சாப்பிட்டுவருவதற்குள் தூங்கிவிடுவாள்" என்று குழந்தையை வாங்கிக்கொண்டார் முதலியார்.

* * *

வீடு முன்போலவேதான் இருக்கிறது. முதலியார் கொஞ்சம் தளர்வடைந்து தோன்றுகிறார். நெற்றியில் கோடுகள் விழுந்திருக்கின்றன. அவர் முகத்தில் சோகம் துன்பம் முதலியவற்றின் சின்னம் இல்லை யாயினும் சிற்சில சமயங்களில் தாயாரைப்பற்றியும் மனைவியைப்பற்றியும் சிவகாமியைப் பற்றியும் நினைவு வரும். அப்போது ஓர் சிறு புயல் அவர் உள்ளத்தே தோன்றும். அத்தகைய சோதனை வேளைகளில் பேரன் பேத்திகளோடு விளையாடுவார். "தாத்தா! தாத்தா!" என்று மழலைச் சொற்களால்

'கடைக் குட்டி' கூப்பிட்டு அவரை வதைக்கும் போது இந்த உலகம் தான் நினைத்தது போல் நரகமாகி விடவில்லை என்று தீர்மானிப்பார்.

முதலியார் தன் வாழ்க்கையில் எவ்வளவோ நஷ்டங்களைச் சகித்தாலும் தன் தாயாரின் முடிவை நினைக்க மனம் தடுமாறும். பெரு வாழ்வு வாழ்ந்த தேவானையம்மாள் கடைசியில் இப்படியா உயிர்விட வேண்டும் என்பதை எண்ணும்போது "சி, இது என்ன உலகம்? இந்த பூமியில் எனக்கு இனிமேல் என்ன இருக்கிறது?... சீ! இனிமேல் இந்த உலகத்துக்கும் எனக்கும் ஒரு தொடர்பும் கிடையாது. இப்போதே......" என்று இவ்வித பரமார்த்திக நினைவுகள் தோன்றி அவரைத் தட்டி எழுப்பும்.

ஆனால் அந்த சமயத்தில் அடுத்த அறையில் புனிதமும் தணிகைவேலனும் பேசிக்கொண்டிருப்பது அவர் காதில் விழும். இரண்டு பேர்களும் 'கலகல' வென்று சிரிப்பது முதலியார் வேதனையைப் போக்கி அவருக்கு ஆனந்தத்தைக் கொடுக்கும். அந்த சமயத்தில் குழந்தைகள் அவரைக் கட்டிக்கொண்டு மடியில் நர்த்தனம் செய்யவே முதலியாருக்கு சிரிப்பு உண்டாகும். அப்போது விதியின் வலிமையை அவர் உணர்வார். "ஆண்டவனே! உன் திருவிளையாடல் யாருக்குத்தான் தெரியும்? மனிதன் ஒன்றுக்கு நினைக்கிறான்; நீ ஒன்று செய்து 'மனிதனே! உனக்குக் கர்வம் வேண்டாம். நீ ஒரு பதர்' என்று போதிக்கிறாய். ஆனால் ஒன்றே ஒன்று கேட்டுக்கொள்ளுகிறேன். இனிமேல் என்னைச் சோதனைக்குள்ளாக்காதே" என்று கண்ணீர் பெருக்கி இறைவனை வேண்டுவார்.

* * *

வஸந்த காலம்; உலகம் புத்துயிர் பெற்று அழகுக் கோயில் போல் விளங்குகிறது. மரங்களும் இளந்தளிர்கொண்டு மின்னுகின்றன. செடிகளில் சிதறிக்கிடந்த மலர்கள் கண்ணைச் சிமிட்டி வண்டுகளைச் சமிக்ஞை செய்து கூப்பிடுகின்றன. சற்று முன் பாழாய்க்கிடந்த உலகத்தில் வஸந்தம் வந்ததும் எவ்வளவு மனோஹரமான மாறுதல் உண்டாகிறது? அத்தகைய மாறுதல் மனிதர் உள்ளத்திலும் கிளர்ச்சியை உண்டாக்கி எப்படிப்பட்ட புதுமைகளையெல்லாம் உண்டாக்குகிறது?

புயலடித்து ஓய்ந்த பிறகு அமைதியேற்படுகிறதல்லவா? அதே மாதிரி முதலியார் வீடு இப்போது அமைதியாய் இருந்தது. வஸந்தகாலம் பிறந்த பிறகு அமைதியான வீட்டில் சற்று பரபரப்பு உண்டாயிற்று.

இரவு. அன்றும் பூர்ணிமைதான். தென்றல்காற்று ஒய்யாரமாக அடித்துக்கொண்டிருந்தது. மாடியி லிருந்தபடியே "புனிதம்!" என்ற குரல் கேட்டது.

"இதோ வந்துவிட்டேன்" என்று வெற்றிலைத் தட்டை எடுத்தவளாய் மாடிக்குச் சென்றாள் புனிதம். முதலியார் மாடியில் நிலாமுற்றத்தில் குழந்தைகளுக்குக் கதை சொல்லிக் கொண்டிருந்தார்.

"நீங்கள் சரியாகவே சாப்பிடவில்லையே ஏன்? ஏதாவது பழம் கொண்டுவரட்டுமா?"

"என்ன புனிதம்? நீ பேசுவது எனக்குப் பிடிக்கவேயில்லை. எங்கிருந்தோ வந்தவன்போல் என்ன 'நீங்கள்' 'தாங்கள்' என்று உபசாரம்? இது ஒன்றுதான் எனக்குப் பிடிக்கவில்லை" என்றான் தணிகு.

"நன்றாயிருக்கிறது. அப்பொழுது அம்மான் மகன் ஒருமையில் கூப்பிடலாம். இப்பொழுது அப்படிக் கூப்பிடுவது மரியாதையா? நம்ம ஜாதி வழக்கப்படி 'அத்தான்' என்று கூப்பிடுவதுதான் முறை" என்று சொல்லியவளாய் பழங்களை எடுத்து வந்து வைத்துவிட்டு உள்ளே சென்றாள் புனிதம்.

முதலியார் பேரன் பேத்திகளுடன் பழங்களைக் கணக்குப் பார்க்கப் புகுந்தார். பாப்பாத்தியின் மகன் வையாபுரி அவரிடம் ஏதோ பேச வேண்டுமென்று வந்து உட்கார்ந்தான்.

புனிதம் எழுந்து உள்ளே சென்றாள்.

வையாபுரி வந்த விஷயம் கொஞ்சம் அந்தரங்கம் ஆகவே தணிகைவேலனும் எழுந்து மெல்ல அடிமேலடிவைத்து உள்ளே நுழைந்தான். புனிதம் ஏதோ பாடல்களை ஆராய்வதில் ஈடுபட்டிருந்தாள். மெல்ல அவள் பின்னால் வந்து கண்களை மூடினான் தணிகைவேலன்.

ஒரு வேளை வையாபுரியின் தங்கையாக விருக்குமோவென்று கைகளைத் தடவிப் பார்த்து " அத்தான்!" என்றாள் புனிதம்.

" இல்லை. தணிகு!"

" அதென்ன அசட்டுப் பிடிவாதம்? அப்படிக் கூப்பிடுவது சரியல்ல. சரியென்று உங்களுக்குத் தோன்றினாலும் எனக்கு இஷ்டமில்லை."

" எனக்குக்கூட புனிதம் என்று கூப்பிடுவது பிரியமில்லை. 'சூர்யே!' என்றாவது 'தேவி!' என்றாவது கூப்பிடட்டுமா?"

" இது கிடக்கட்டும்; நீ என்ன படித்துக்கொண்டிருந்தாய்? எடு பார்ப்போம்."

" அருட்பாவைப் படித்துக்கொண்டிருந்தேன். சோதி என்பதைப்பற்றி வள்ளலார் என்ன சொல்லுகிறார் என்று பார்த்துக்கொண்டிருந்தேன். அப்பொழுது ஏதோ ஒரு தனிப்பாடல் நினைவு வந்தது. 'கதிரவன் ஒளியிலும் கண்ணொளி சிறந்தாகும்.' அது எதில் வந்தது, யாருடையது என்று சிந்தித்துக்கொண்டிருந்தேன்."

"ஆமாம். கண்ணொளி யில்லாவிடில் கதிரவன் ஒளி தானகட்டும் எந்த ஒளி தானகட்டும் எப்படித் தெரியும்? ஒளிதான் உலகின் உயிர். வெளியே பார். நிலவின் ஒளியினால் உலகமே மயங்கிக் கிடக்கிறது. வானத்தில் தன்னொளி பரப்பும் கதிர் மதிபோல் எங்கள் வீட்டிலும் ஒரு கதிர் மதி உண்டு."

" சரிதான்! போதும் போதும்" என்று புருவத்தை நெறித்தாள் புனிதம்.

" இல்லை, புனிதம்! கோபித்துக்கொள்ளாதே. அது மதியல்ல, விளக்கு என்று வைத்துக் கொள்ளேன். அதன் பெயர் என்ன தெரியுமோ? இல்—ஒளி அதாவது இல்லொளி என்று பெயர். அந்த விளக்கின் ஒளியினால் பலருக்குக் கண்ணொளி கிடைத்தது. இல்லாவிட்டால் குருடுதான். அந்த ஒளி தேவியின் பிரதிபிம்பம்தான். அதற்கு சுருண்ட குழற் கற்றையுண்டு: சிவந்த இதழ்களுண்டு."

"போதும், போதும். சாக்ஷாத் தேவானையம்மாளுடைய பேரப் பிள்ளை தான்" என்று சொல்லியவளாய் எழுந்தோடினாள் புனிதம்.

தாங்கள் திருமகள் புனிதவதியார் தேவானையம்மாளுக்கு என்ன உறவோ? என்று கேட்ட வண்ணம் அவள் மலர்க் கரங்களைப்பற்றி அவளைப் போக ஒட்டாமல் தடுத்தான் தணிகைவேலன்.

(சுபம்.)

---

# இன்டஸ்டிரியல் & கமர்ஷியல் சர்விஸ் லிமிடெட்

அதிகாரம் பெற்ற மூலதனம் ரூ. 1,00,000 உடன் இன்டஸ்டிரியல் & கமர்ஷியல் சர்விஸ் லிமிடெட் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. எஞ்ஜினியரிங், தொழில் வியாபார விஷயங்களில் மிகவும் அனுபவமுள்ளவர்கள் டைரக்டர் போர்டில் அங்கம் வகிப்பது குறிப்பிடத்தக்கது. இந்தியாவில் தொழில், வியாபார முன்னேற்றத்தில் சிரத்தை உள்ளவர்கள் இப்படிப்பட்ட கம்பெனிகள் அவசியத்தை உணர்வார்கள். ஏராளமான தொழில்களுக்கு இந்தியாவில் இடமிருக்கிறது. அத்தகைய தொழில்களை ஆரம்பிப்பது இக் கம்பெனியாரின் திட்டம். முக்கியமாக, வலை, ரசாயனப் பொருள்கள் முதலியவற்றை உற்பத்தி செய்வதும், தொழிற் காட்சி சாலை அமைத்து வாங்கவும் விற்கவும் சௌகரியங்கள் செய்துக் கொடுப்பதும், இன்னும், தொழில் வியாபார விஷயங்களுக்காக ஓர் மாதப் பத்திரிகையும் பிற்பாடு டைரக்டரியும் வெளியிடுவதும் கம்பெனியின் நோக்கங்களில் சில. இதைத் தவிர லாபம் உண்டாகக்கூடிய சில ஏஜன்ஸிகளையும் இக்கம்பெனி எடுத்துக்கொள்ள உத்தேசிக்கிறது.

ஆரம்பத்திலிருந்தே லாபம் உண்டாகக் கூடிய இனங்களில் கம்பெனி கவனம் செலுத்தி யிருப்பது பாராட்டத்தக்கது. தொழில் அனுபவமும் எஞ்ஜினியரிங் அனுபவமுள்ள நிர்வாகம் சிக்கனத்தைக் கொண்டிருப்பதால் கம்பெனி பலம் பெறும் என்பதில் சந்தேகமில்லை. தக்க ஆதரவுடன் இக்கம்பெனி பங்குதாரர்களுக்கும் இந்திய தொழில் வளர்ச்சிக்கும் பெரும் சேவை செய்யும் என்று நம்புகிறோம்.




# வருஷப் பிறப்பு

(ஸ்ரீ எஸ். லக்ஷ்மணராவ் பீஷ்வா.)

உலகத்திலிருக்கும் ஒவ்வொரு தேசத்திற்கும் அததற்கு தகுந்தாற்போல, புது வருஷ தினம் என்று ஒன்று இருக்கிறது. ஆனால் அத்தினம் எல்லோராலும் ஒரே சமயத்தில் கொண்டாடப்படுவதில்லை.

சூரியன், அதன் வழியாகச் சுற்றி ஒரு தரம் வந்தால் எவ்வளவு காலமாகுமோ, அக்கால அளவிற்கு ஒரு வருஷம் என்று பெரியோர்கள் கணக்கிட்டிருக்கிறார்கள்.

இந் நிகழ்ச்சி, சாதாரணமாக ஏப்ரல் மாதம் 12-ந் தேதி நடைபெறுவது வழக்கம். இதை ஒரு புண்ய காலம்—ஒரு தூய்மையான நாள் என்று ஹிந்துக்கள் கருதி, இவ்வருஷதினத்தன்று பிதுர்க்களுக்குத் தர்ப்பணம் செய்கிறார்கள். மற்றும் இந்த நாள் விருந்துடன் கொண்டாடப்படுகிறது.

வான சாஸ்திரப்படி, இவ்வருஷமானது சாதாரணமாக ஏப்ரல் மாதம் 12-ம் தேதி விழுந்தபோதிலும், இவ்வருஷப்பிறப்பை ஹிந்துக்களின் பல்வேறு ஜாதியர்கள் பல்வேறு விதமாகக் கொண்டாடுகிறார்கள். அதாவது தமிழர்கள் இதை ஏப்ரல் 12-ம் தேதி கொண்டாடுகிறார்கள். தெலுங்கர்களும், கன்னடர்களும் சாந்திரமானத்தைப் பின்பற்றுவதால், இவ்வருஷப்பிறப்பு அவர்களுக்கு ஏப்ரல் மாதம் 12-ம் தேதிக்கு முன்னமேயே ஆரம்பமாகிவிடுகிறது.

வருஷப் பிறப்பு தினத்தன்று, பெரியவர்கள் ஆற்றங்கரைக்கோ, சமுத்திரத்திற்கோ சென்று, ஸ்நானம் செய்து, மடியோடு தர்ப்பணம் செய்கிறார்கள். குழந்தைகள் புதப்புதுச் சட்டைகளையும் ஆபரணங்களையும் அணிந்துகொள்ளுகிறார்கள். அன்றைய தினம் கோவிலுக்குச் சென்று கடவுளை வழிபடுகிறார்கள். சில வீடுகளில், குழந்தைகளுக்கும், மற்றும் உள்ள வீட்டிலுள்ளோர்க்கும், புதுத் துணிகள் வாங்குகிறார்கள். ஒவ்வொரு வீட்டிலும் நல்ல சமையல் செய்து, அவர்களுக்கு யாராவது ஏழை பந்துக்கள் இருந்தால் அவர்களையும் அழைத்து, எல்லோருமாகச் சேர்ந்து சந்தோஷமாக உணவை அருந்துகிறார்கள்.

அன்று சாயங்கிரம் ஒரு மடத்திலாவது அல்லது ஒரு குறிப்பிட்ட இடத்திலாவது ஒரு சாஸ்திரி புது வருஷப் பஞ்சாங்கத்தைப் படிக்கிறார். ஜனங்கள் அவ்விடம் கூடி இதைக் கேட்கிறார்கள்.

மலையாளத்தில், இப்பண்டிகையை அழகாகவும் தடபுடலாகவும் செய்கிறார்கள். இப்புதுவருஷதினத்தின் முதல் நாள் சாயங்கிரம், அவர்கள் தங்கள் குல தெய்வங்களைத் தொழுவதின் பொருட்டு, வீட்டில் கிடைக்கக் கூடிய தங்க நாணயங்களையும், தங்க நகைகளையும், நல்ல நல்ல பழங்களையும், புஷ்பங்களையும் சேகரித்து, ஒரு அறையில் தனியாக வைக்கிறார்கள். அவ்வீட்டின் எஜமானர் வருஷப்பிறப்பு தினத்தன்று, விடியற்காலையில் எழுந்து, இவ்வறையின் உள்ளைத்திறந்து, ஒரு குத்து விளக்கைக் கையில் ஏந்திய வண்ணமாக இத் தங்க நாணயங்களையும், மற்றும் சேகரித்துள்ள பதார்த்தங்களையும் தொழுவார். பிற்பாடு, வீட்டிலுள்ள ஒவ்வொருவரும் தங்கள் கண்களை மூடிக்கொண்டு அவ்வறைக்குள் செல்வார்கள். அவ்வுள்ளுக்குள் சென்றவுடனே, இச்சேகரித்துள்ள சாமான்களைப் பார்ப்பதற்காகக் கண்களைத் திறப்பார்கள். இது ஆன பிறகு, அவ்வீட்டின் தலைவர், ஒவ்வொருவருக்கும், காசோ, நகையோ, புஷ்பமோ அல்லது பழமோ ஏதாவது ஒன்றைக் கொடுப்பார்.

கலை அனுபந்தம் :

# புத்தக விமர்சனம்

அற்புத உலகம் (ஆசிரியர்: ஸ்ரீ பெ. நா. அப்புஸ்வாமி பி. ஏ, பி. எல்., பிரசுரகர்த்தர், கலைமகள் காரியாலயம், மைலாப்பூர், சென்னை. விலை ஒரு ரூபாய்)

அற்புத உலகம் என்ற தலைப்பின் கீழ் ஸ்ரீ. பெ. நா. அப்புஸ்வாமி எழுதிய பதிமூன்று கலைக் கட்டுரைகள் வெளியாகியிருக்கின்றன. ஆசிரியர் தன் முகவுரையில் நாம்வாழும் அற்புத உலகத்தின் விந்தைகளை ஆராயவும் அவற்றின் தத்துவங்களை அறியவும் மேல்நாடுகளில்முயன்று வருகிறார்கள். அம்முயற்சிகளால் புத்தம் புதிய கலைகள் அங்கே தோன்றி வளர்ந்து வருகின்றன. நமது தமிழ்மொழி மூலமாக அவற்றை வெளியிட வேண்டுமென்ற ஆசை என்னைத் தூண்டிற்று'' என்று எழுதி யிருக்கிறார். இப்படிப்பட்ட ஆசை எல்லோருக்கும் தோன்றுவதுகிடையாது. ஏனென்றால் 'கலை', 'விஞ்ஞானம்' என்று எழுதினல் ஒருவரும் ரஸிக்கமாட்டார்கள், வாசிக்கமாட்டார்கள் என்று எண்ணினர்கள். உண்மையில், சிலர் தப்பித்தவறி எழுதிய விஞ்ஞானக்கட்டுரைகள் கரடுமுரடாக இருந்தபடியால் பொது ஜனங்கள் அதைப்படித்துத் தெரிந்து கொள்வதே ஒரு கலை என்று தீர்மானித்தார்கள்.

ஆனல் ஸ்ரீ. அப்புஸ்வாமி அவர்களின் கட்டுரைகளோ குழந்தைகள்கூடத் தெரிந்துகொள்ளும்படி அமைந்திருக்கின்றன. அதுமட்டுமல்ல; அவர்கள் சந்தோஷத்தோடு கட்டுரைகளை வாசிப்பார்கள். ஆம்; கட்டுரைகளைக் கதை சொல்லுவதுபோல் எழுதியிருக்கிறர் ஆசிரியர்.

பல சிக்கலான விஞ்ஞான உண்மைகளையும், விபரங்களையும் ஆராய்ச்சியுடன் ஆசிரியர் தெளிவாக எழுதியிருப்பதைப் பார்க்கும்போது அவர் எவ்வளவு சிரமம் எடுத்துக் கொண்டிருக்கவேண்டுமென்பது நன்ருகத்தெரிகிறது. பழைய புத்தகங்களையும் விஞ்ஞான நூல்களையும் புரட்டிப்பார்த்து மிக்க சிரத்தையுடன் உண்மை சிதையாமல் வெளியிட்டிருக்கிறர். அனுவசியமான வார்த்தை அப்புத்தகத்தில் ஒன்று கூடக்கிடையாது.

இப் புத்தகம் பெரியவர்களுக்கும் சிறியவர்களுக்கும் அறிவை ஊட்டும் ஒரு பொக்கிஷம் என்றே சொல்லலாம்.

லீலாவிநோத சமஸ்தானங்கள் (ஆசிரியர் : வி. ரா. பிரசுரகாத்தர்கள் : ஸௌத் இந்தியன் பப்ளிஷர்ஸ் லிமிடெட், ஜி. டி., சென்னை விலை. 6 அணு)

சமஸ்தானப் பிரச்னை அடிபடும் இக்காலத்தில் இத்தகைய புத்தகம் தமிழில் வெளிவந்திருப்பது பொருத்தமாய் இருக்கிறது. தெலுங்கில் எழுதப்பட்ட முதல் நூலிலிருந்து இது மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. டாக்டர் பட்டாபி அளித்துள்ள சிறப்புரையும் ஸ்ரீ ஜான் கந்தர் சுதேச மன்னர்களைப் பற்றி எழுதிய ஓர் அத்தியாயமும் இப்புத்தகத்தில் சேர்க்கப் பட்டிருக்கின்றன. சில சமஸ்தான மன்னர்கள் செய்யும் அட்டுழியங்களையும் அந்தர்பார்களையும் ஆராய்ச்சியுடனும் மேற்கோள்களுடனும் ஆசிரியர் கூறியிருக்கிறர். இப் புத்தகத்தைப் படிப்பவர்கள் சமஸ்தானங்களில் குடி கொண்டிருக்கும் ஊழல்களைத் தெரிந்து கொள்வார்கள். சமஸ்தானங்களில் ஊழல்கள் ஒழிந்து நேர்மையும் ஒழுங்கும் ஏற்பட வேண்டும் என்ற எண்ணத்தை இந் நூல் வற்புறுத்துகிறது.

ஸாயி பாபா (ஆசிரியர்: பி. வி. நரசிம்மஸ்வாமி, மொழிபெயர்ப்பு : ஆர். டி. குப்பு சுவாமி அய்யர்.)

ஸாயிபாபா என்ற பிரசித்தி பெற்ற மகானுடைய சரித்திரத்தையும், அவர் இழைத்த அற்புதங்களையும், அவர் மக்களுக்குச் செய்த உதவிகளையும் தெரிவிக்கிறது இப்புத்தகம். ஹிந்துக்கள், முஸல்மான்கள் எல்லோரும் பக்தியுடன் ஸாயி பாபாவை வழிபட்டார்கள். அவர் எந்த மதத்தைச் சேர்ந்தவரென்பது ஒருவருக்கும் தெரியாது. ஆனல் எல்லா மதத்தினரையும் ஒன்று சேர்க்கும் ஞானியாக இருந்தார். இத்தகைய ஒப்பற்ற சந்நியாசியின் சரித்திரத்தை எல்லோரும் அறிய வேண்டியது அவசியம்.

## தமிழர் யார்?

(ஆசிரியர்: நாரண துரைக்கண்ணன் பிரசுரகர்த்தர்: சக்தி பிரசுராலயம், மைலாப்பூர், சென்னை. விலை அணு 4)

ஆரியர்-திராவிடர் பிரச்னையைத் தூண்டிவிடும் வகுப்புவாதிகளுக்கு இப் புத்தகம் தக்க பதில் அளிக்கிறது. தென்னாட்டுப் பிராமணர்கள் ஆரியர்கள் என்று சில புத்திசாலிகள் சொல்கிறார்களல்லவா? அந்தக் கூற்றை சரித்திர பூர்வமாக ஆசிரியர் ஆராய்கிறார். ஸர் ஜான் மார்ஷல் முதல் 'என்ஸைக்ளோ பீடியா பிரிட்டானிக்கா' வரையில் சகல நூல்களிலிருந்தும் மேற்கோள்களை எடுத்து ஆராய்ந்து தமிழ் நாட்டில் ஆரியர் யார் தமிழர் யார் என்று ஓர் தீர்மானமான முடிவுக்கு வருவது எவ்வளவு அசாத்தியமானது என்பதை உணர்த்துகிறார்.

பின்னும், தற்காலத் தமிழருக்கும் பழங்காலத் தமிழருக்கும் உள்ள வித்தியாசத்தை ஆசிரியர் கூறுகிறார். தற்போது உள்ள தமிழர்கள் "ஆதியில் வந்த தமிழர், தமிழர் முன் வந்த நாகர், பின் வந்த தூரானியர், ஆரியர் முதலிய பல பிரிவினரும் கலந்த கூட்டத்தார் ஆவர்" என்று ஆணித்தரமாகக் கூறுகிறார். "ஆகவே நாங்கள்தான் அசல் தமிழர்; எங்கள் தேகங்களில் ஓடுவதுதான். அசல் தமிழ் இரத்தம் என்று ஒருவரும் உரிமை கொண்டாடிக் கொள்ள முடியாது" என்று முடிவு கட்டுகிறார்.

பிறகு, புத்தகாசிரியர் பல பிராம்மணப் பெரியார்கள் தமிழுக்குச் செய்த தொண்டை நினைப்பூட்டி இவர்களை தமிழர்களல்லவென்று கூறுவது சிறிதாயினும் நியாயமா?" என்று கேட்கிறார்.

மிக்க ஆராய்ச்சியுடன் கூடிய இப் புத்தகத்தை ராஜீய விஷயங்களுக்காக மட்டுமின்றி, பொது அறிவுக்காக எல்லோரும் படிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

## மின்னொளி

மின்னொளி என்ற சினிமாப் பத்திரிகையின் இரண்டு ஒளிகள் கிடைக்கப் பெற்றோம். அழகிய ஆர்ட் பிளேட்டுகளுடன் கண்ணைக் கவரும் சினிமா படங்களுடனும் கட்டுரைகளுடனும் மின்னொளி மிளிர்கிறது. பத்திரிகையின் இரண்டு ஒளிகளை நாம் பார்த்ததும் மற்ற சினிமாப் பத்திரிகைகளுக்கும் இதற்குமுள்ள வித்தியாசம் நன்றாய்த் தெரிந்தது. சினிமா பத்திரிகைகளென்றால் அதைப் படிக்க மன உறுதி வேண்டும். அதில் எழுதப் படும் வசைப் புராணங்களையும் ஆபாசங்களையும் படித்துத் திடுக்கிடாமலிருக்க வேண்டுமானால் ஓர் தனி தைர்யம்தான் வேண்டும். ஆனால் ஸ்ரீ பி. ஆர். எஸ். கோபால் அவர்களை ஆசிரியராகக் கொண்ட இப் பத்திரிகை மிகவும் கண்யமான முறையில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

சினிமாவைத் தவிர விளையாட்டுகளைப் பற்றியும், ரேடியோவைப்பற்றியும் கட்டுரைகள் காணப்படுகின்றன. ஸ்ரீ ஜே. சுப்புஸ்வாமி, ஸ்ரீ டி. பி. பாலகோபால் முதலியவர்கள் ரஸமான கட்டுரைகள் எழுதி விளையாட்டுப் பகுதியை அழகு படுத்தி யிருக்கிறார்கள்.

சினிமா சம்பந்தமான 'கார்ட்டூனும்' ஒவ்வொரு ஒளியிலும் காணப்படுகிறது. இவ்வளவு புதிய அம்சங்களுள்ள ஓர் பத்திரிகை நிச்சயம் வெற்றியடையும் என்பதில் சந்தேகமில்லை.

### ஆசிரியர் அறிக்கை

முக்கியமாக கிராமப் புனருத்தாரணத்தைப் பற்றியும், பொதுவாக ஸ்தல ஸ்தாபன, ரோட்டு, ரயில் சௌகரியா சௌகரியங்களைப் பற்றியும், நேயர்கள் தங்களுக்குத் தோன்றும் ஆலோசனைகளை நமக்குச் சுருக்கமாக எழுதி அனுப்புமாறு கோருகிறோம். அந்த யோசனை நமது சமூக வாழ்வின் எந்த அம்சத்தைக் குறித்தாகிலும் இருக்கலாம்; தனி நபரைக் குறித்துமட்டும் இருக்கக் கூடாது.

ஆசிரியர்

# மாயா மசீந்திரா

சகோதரிகளே! எழுந்திருங்கள்! உறங்காதீர்கள்! வீறு கொண்டு எழுந்து தாக்கு தாக் கென்று தாக்குங்கள். அவமானம், அவமானம்.........

இந்த மாதிரி நான் ஆரம்பித்தால் ஓர் ஹிந்தி எதிர்ப்புப் பிரசங்கம் செய்யப் போகிறேனென்று நினைக்கலாம். அப்படிப் பட்ட சந்தோஷத்தையோ துக்கத்தையோ நான் ஒருவருக்கும் கொடுக்கப் போகிற தில்லை. ஆனல், மற்ருெரு முக்கிய மான விஷயத்திற்கு சகோதரிகள் கவனத் தை 'கிர்'ரென்று இழுக்க விரும்புகிறேன்.

எப்படிப் பட்ட முக்கியமான விஷயம், தடபுடலான விஷயம் என்று நான் சொல் லப் போவதில்லை. பின் வரும் கதையைத் தயவுசெய்து படியுங்கள்.

காம்ரூப் என்ற தேசத்தை ஊர்மிளா தேவி என்ற ஒரு ராணி ஆண்டு வந்தாள். அந்த தேசத்திற்குள் ஆடவர் ஒருவரும் போகக் கூடாது. போனல் தலை போய் விடும். எவ்வளவோ அரசர்கள் படை யெடுத்து வந்து தோற்று ஓடி விட்டார் கள். அந்த ராணியின் கர்வத்தை அடக்க மசிந்திரர் என்ற முனிபுங்கவர் ஆசைப் பட்டு, காம்ரூபுக்கு வந்தார். அவரை ராணி பிடித்துக் கொல்ல எண்ணியபோது ஒன்றும் பலிக்கவில்லை. மசிந்திர நாதரின் தபோபலத்தின் முன் ஸ்திரீசக்தி நிற்க முடியவில்லை. ஊர்மிளா சரணுகதியாகி விட்டாள். தன்னை ஏற்றுக் கொள்ளும் படி மன்ருடினள். ஊர்மிளாவின் களங்க மற்ற காதலைத் தட்ட முடியாமல் மசிந்தி ரர் தனது ஆசிரமத்தைத் துறந்து கிரு ஹஸ்தாச்ரமத்தைக் கைக்கொண்டார். தனது தபோபலத்தை இழந்து உலக இன்பங்களில் ஆழ்ந்தார்.

மசிந்திர நாதரின் சிஷ்யன் கோரக் இதைக் கேள்வியுற்று குருநாதரைக்காண காம்ரூப் வந்தான். மசிந்தரரின் புரட்சி கரமான புது வாழ்வைக் கண்டு மனங் கொதித்து தன்னுடன் வரும்படி வேண்டி னன். முடிவில் சிஷ்யன் விருப்பத் திற்கு இணங்கி இல்லற வாழ்வைக் களைந்து துறவியானர். ஊர்மிளாவும் கடைசியில் சந்நியாசம் பூண்டு நாதனை அடைகிருள்.

கதையில் ஸ்வாரஸ்யமான கட்டம் என்னவென்ருல், மசிந்திரர் மனைவி மக் களைத் துறந்து மீண்டும் சந்நியாசம் பெறும் போதுதான். ஒரு பக்கம் மனைவியின் காதல், புத்திரவாஞ்சை; மற்ருெரு பக்கம் ஆத்ம விடுதலை, பேரின்பம்—இவைகள் மசிந்திரரை வாட்டி வதைக்கின்றன. கடைசியில் உலகபாசத்தை விட்டுத் தொலைத்துத் தலை முழுகுகிருர்.

மோட்சமடைவதற்குக் குறுக்கே நிற் பது ஸ்திரீகள்தான் அல்லது அவர்கள் சக்திதான் என்றும், ஸ்திரீகள் வலையில் வீழ்ந்துவிட்டால் அப்புறம் அதோகதி தான் என்றும் கதை உணர்த்துகிறது.

சகோதரிகளே! இது அவதூறல்லவா! மோட்சத்திற்கு நீங்கள் குறுக்கே நிற் கிறீர்களா? இந்த மசிந்திர நாதர் உங்களைப் பற்றிச் சொல்லுவது தவறல்லவா?

ஸ்திரீ சக்தியைப்பற்றி இத்தகைய அவதூறைக் கூறிய மசிந்திர நாதருக்கு சகோதரிகள் சார்பாக மனப்பூர்வமான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்ளு கிறேன்.

ஆனல் மசிந்திரர் "உலகம் வெறும் மாயை; ஒன்றையும் கண்டு நாம் பெரிதாக எண்ணக்கூடாது' என்று சொல்லிவிட்ட படியால் அவர் ஸ்திரீகளைப்பற்றிச் சொன் னதைக்கூட நாம் பெரிதாகப் பாராட்டா மல் விட்டுவிடவேண்டும்!

அடுத்தபடியாக, இவ்வளவு நல்ல கதை யின் கருத்து சிதையாமல் மசிந்திரரின் வாழ்க்கை வரலாற்றைத் தத்ரூபமாய் எடுத் துக்காட்ட முயன்ற மெட்ராபாலிடன் பிக்சர்ஸார் பெரிதும் வெற்றி யடைந்திருக் கிருர்கள் என்பதைக் குறிப்பிட வேண் டும்.

இந்த வெற்றிக்கு முதல் காரணம் நல்ல நடிகர்களைப் பொறுக்கி எடுத்திருப்பது தான். ஸ்ரீ எம். கே. ராதாவைத் தவிர வேறு நல்ல நடிகரை மசிந்திரநாதர் வேஷத் திற்குத் தேர்ந்தெடுத்திருக்க முடியாது. ஸ்ரீ ராதா மிகவும் உணர்ச்சியுடன் நடிக்கக்

கூடியவர். அதை நன்ருக நிரூபிக்கிறது இப்படம். மொத்தத்தில் எல்லா நடிகர் களுக்கும் வேஷம் பொருத்தமாகத்தான் இருக்கிறது. ஆனல் கதாநாயகி வேஷத் திற்கு மட்டும் வேறெருவரை ஏற்பாடு செய்திருக்கலாம்.

டைரக்டர் சந்திரசேகர் மிகவும் சிரத் தையுடன் ஸீன்களை அமைத்திருக்கிருர். நாம் மறக்க முடியாதபடி, எப்போதும் ஞாபகம் வைத்துக்கொள்ளத் தக்க காட் சிகள் இப்படத்தில் ஒன்றும் இல்லாவிட் டாலும், பொதுவாக குறைபாடுகள் இல் லாமல் இருப்பது சந்தோஷமான கார்ய மல்லவா?

சங்கீத விருந்து வேண்டுமென்பவர்களை இந்தப் படத்திற்கு உடனே போகும்படி சிபார்சு செய்யலாம். தகூஷயக்ஞத்தில் நன்ருய் பாடிய ஸ்ரீ வேங்கடேசன் இங்கே யும் இரண்டு பாடல்களை வெகு அழகாகப் பாடியிருக்கிருர்.

இப்படத்தில் ஹாஸ்யம் கிடையாது; ஆனல் சிரிப்பு மூட்டத்தக்க இடங்கள் நிறைய இருக்கின்றன. கீழ்த்தரமான படங்களில் உள்ள ஹாஸ்யத்தின் பிசாசு இந்தப்படத்தில் அங்கங்கே தலையை நீட் டுகிறது. சில சமயங்களில் 'இவ்வளவு அழகிய படத்தைக் குட்டிச் சுவர் படுத்து கிருர்களே!' என்று வருத்தப்படும்படி இருந்தது. மசீந்திரரின் ஸ்திரீலோல ஞன சிஷ்யன் பண்ணின கலாட்டாவைப் பார்த்து கோரக் "நீ இவ்வளவு மோச மாய்ப் போய் விட்டபடியால் நீ பெண் ணுய் போகக்கடவது" என்று சபிக்கும் படியிருந்ததால் நமக்கு எவ்வளவு கோபம் உண்டாகாது?

இந்தப் படம் நன்ருயிருக்கிறது; ஆக்ஷேபணையில்லை. ஆனல் ஒரே ஒரு விஷயத்தைமட்டும் படத்தைப் பிடித்தவ ருக்குக் கூற விரும்புகிறேன்: "ஐயா! எல்லோரையும் போல ஆபாஸ விஷயங் களை அடிக்கடி படத்தில் நுழைத்தால் தான் ஜனங்கள் ரஸிப்பார்கள் என்று எண்ணவேண்டாம். கண்யமான ஹாஸ் யத்தை உண்டாக்க அடுத்த படத்தில் நீங் களாவது முயலுங்களேன்."

(வே. சு. ரா.)

---

# வரப்பெற்ருேம்

தருமபுரம் ஸ்ரீலஸ்ரீ பண்டார சந்நதி அவர்கள் மனமுவந்து அனுப்பிய பின் வரும் புத்தகங்கள் கிடைக்கப் பெற் ருேம்.

1. திரிபதார்த்த ரூபாதி தசகார்ய அக வல்
2. தசமணி மாலை
3. திருப்பதிகம்
4. சிகாரத்ன மாலை
5. நித்திய கன்மநெறி
6. ஞான சம்பந்த குருராய வட்டகம்
7. சமூக மாலைத் தாலாட்டு
8. சோடசகலாப்ரசாத சட்கம்
9. ஞான பூசாகரணம்
10. சிவானந்த போதசாரம்
11. சிவபோக சாரம்
12. பண்டார மும்மணிக் கோவை
13. இந்து மத பால பாடம்
14. யஜுர் வேதம்
15. முக்தி நிச்சயம்
16. முத்துக் குமாரசாமித் தமிழ்
17. சிதம்பர செய்யுட் கோவை
18. கிளி விடு தூது
19. திருமுல்லைவாயிற் புராணம்
20. அரிவானந்த சமுத்திரம்
21. சித்தார்த்த நிச்சயம்
22. திருவையாற்றுப் புராணம்
23. சம்பிரதாய தீபம்
24. திருத்துருத்தி புராணம்
25. சைவ சந்நியாச பத்ததி
26. வர்ணுசிரம சந்திரிகா

# ஹம்பியில் இரண்டு நாட்கள்

(ஸ்ரீ. ரா. ஆறுமுகம்)

கி. பி. 1118-ல் விஜயராஜன் துங்கபத்திரையின் வடகரையிலுள்ள ஆனைகுந்தி என்ற குக்கிராமத்தைத் தலைநகராகக் கொண்டு தன் பெயரால் விஜய நகரத்தை ஸ்தாபித்தான். அவனுக்குப் பின் வந்த பல அரசர்களை சரித்திரம் விரிவாகக் கூறவில்லை யென்றாலும், புக்கன், ஹரிஹரன், வீரநரசிம்மராயர், கிருஷ்ண தேவராயர் முதலியவர்களின் ஆட்சியின்கீழ் விஜயநகரம் சுமார் 500 ஆண்டுகளுக்கு மேலாக வெகு உன்னத நிலையை அடைந்திருந்தது என்பதை இன்று ஹம்பியில் பாழடைந்து கிடக்கும் சில சின்னங்களைக் கொண்டு அறிகிறோம்.

ஹம்பி, சென்னைக்கு வடக்கே 350 மைல் தூரத்திலிருக்கிறது. ஹாஸ்பட்டிலிருந்து செல்லும் மோட்டாரிலோ குதிரை வண்டியிலோ சென்றால் விஜயநகரத்தின் பாழடைந்த பாகங்கள் எல்லாவற்றையும் காண முடியாது என்று சொல்லக் கேட்டு கால்நடையாகவே புறப்பட்டேன். ஹாஸ்பட் எல்லை கடந்ததும், சாலையின் இருபக்கங்களிலும் ஓங்கி வளர்ந்த மரங்களும், கண்ணுக்கெட்டிய தூரம் வரை பசுமையான வயல்களும், சிற்சில இடங்களில் திடர்திடராகப் பாறைகளும், அதைச் சுற்றிச் செடி மண்டிக் கிடக்கும் புதர்களும் காணப்படுகிறது. ஆறு மைல் சென்றதும் பெரிய சாலையினின்றும் ஒரு தனி வழி பிரிந்து காட்டு மார்க்கமாகச் செல்லுகிறது. அந்த இடத்திலிருந்து தென்மேற்கில் நோக்கினால் அரை மைல் தூரத்தில் ஒரு பெரிய பளிங்கு மாளிகை போன்ற கட்டிடம் தெரிகிறது. அதைப் பார்த்த வுடனேயே அது தான் கிருஷ்ண தேவராயரின் மாளிகையோ என்று நினைத்தேன். ஆனால் உள்ளே சென்று பார்த்துவிட்டு, அப்பக்கம் சென்ற சில குடியானவர்களை விசாரித்ததில் அது கிருஷ்ண தேவராயருக்கும் அவரின் இரு மனைவியார்களுக்கும் கட்டிய சமாதிஎன்று சொன்னார்கள். இந்தச் சமாதியில் தான் எத்தனை சித்திரவேலைப்பாடுகள்! கேவலம் இச்சமாதியே இவ்வளவு நேர்த்தியாக விருந்தால் மற்ற அரண்மனைகளெல்லாம் எப்படி யிருக்குமோ என்று அறிய ஆவல் தூண்டியது.

அந்த வழி ஹம்பியை பிரதக்ஷணமாகச் சுற்றிக் கொண்டு சிறு சிறு குன்றுகளினூடே செல்லுகிறது. அதைத் தொடர்ந்தே சென்றால் முட்புதர்களில்லாத வழுவழுப்பான பாறைகளாலாகிய ஒரு பெரிய குன்றத்தின்மீது ஒரு மண்டபம் தெரிகிறது. அப்பாறையிலேயே படிகளும் வெட்டி விடப்பட்டிருக்கிறது. மண்டபத்தினுள் ஒரே கல்லால் செதுக்கப்பட்ட பெரிய விநாயகர் விக்கிரகமிருக்கிறது. அதன் இடது கையின் முன்பாகத்தை எவனோ உடைத்து அதை விக்கிரகத்தின் பாதத்திலேயே சமர்ப்பித்திருக்கிறான். அக்குன்றிலேயே இன்னும் சற்று தூரம் சென்றால் மற்றொரு பெரிய மண்டபம். இதனுள்ளிருக்கும் விநாயகரை முதன் முதலாகப் பார்க்கும் எந்த மனிதனும் பயத்தாலோ, ஆச்சரியத்தாலோ, பின்னடையா



ஹம்பி நரசிம்மன்

னுகில், அவன் மிக்க மனோதிடமுள்ளவன் என்றே சொல்ல வேண்டும். சுமார் 16 அடி உயரம், 12 அடி அகலம், 20 அடி சுற்றளவு. இதை விநாயகர் விக்கிரம் என்று சொல்லுவதைக் காட்டிலும், ஒரு சிறிய குன்று என்பதே பொருந்தும். உருவத்தின் பருமன் தான் நம்மைப் பிரமிக்கச் செய்கிறதே யன்றி முகத்தைக் கூர்ந்து கவனித்தால் களை சொட்டுகிறது. அவ்வளவு நேர்த்தியாக உளியிட்ட சிற்பியின் சாமர்த்தியத்தை நினைக்க நினைக்க அந்த இடத்தை விட்டு நகரவே தோன்றவில்லை. அக்குன்றிலிருந்தபடியே தெற்கே திரும்பினால் கரும்பும், வாழையும், தென்னையும், செறிந்து தோன்றும் மிகக் குளிர்ந்த பிரதேசத்தின் மத்தியிலிருக்கும் பெரிய விக்கிரகத்தின் பின்பாகம் கண்ணில் படுகிறது. அதற்கு வழியைக் கண்டு பிடித்துச் சென்று பார்த்தவுடன் நம் ரயில்வே கம்பெனியார்கள் ஹம்பியின் விளம்பரத்திற்காக உபயோகப்படுத்தும் நரசிம்ம மூர்த்திதானென வெளியாகிறது. மண்டபம் ஏதுமில்லாமல் வெய்யிலிலும் மழையிலும் நூற்றுக் கணக்கான ஆண்டுகளாய் நிற்கும் அந்த விக்கிரகத்தின்மேல் வெய்யில் படாதபடி ஏழு தலைகளையுடைய பெரிய பாம்பு குடையாக விரிந்திருக்கும் காட்சி நம்மைப் பரவசப்படுத்துகிறது. இது மேற்சொன்ன விநாயகரைக் காட்டிலும் ஒன்றரை மடங்கு பெரிது. சிறு குழந்தைகள் பார்க்க நேர்ந்தால் பயந்து வீறிட்டு விடுவார்கள். பெரியவர்களே அதை நிமிர்ந்து பார்க்கும்போது ஒரு கையால் பக்கத்திலுள்ள சுவரைப் பிடித்துக் கொள்ள வேண்டியதிருக்கிறது. அவ்வளவு பிரம்மாண்டமா யிருக்கும். அதன் கண் விழிகள் ஒவ்வொன்றும் ஒரு பெரிய தேங்காய்ப் பருமனிருக்கிறது. விக்கிரகம் உயிர்பெற்று ஒரு மூச்சு உள்ளே இழுத்தால், திறந்திருக்கும் அதன் வாய்வழியாக இரண்டு மனிதர்கள் தாராளமாய் உள்ளே போய் விடக்கூடும். காலத்தின் கோலத்தால் வாயின் முன்பாகம் மட்டும் சிறிது உடைந்து விழுந்திருக்கிறது. இது 1497ல் ஆண்ட வீரநரசிம்மராயரின் ஞாபகார்த்தமாக எழுப்பப் பட்டதாம்.

அதற்கு அடுத்த 20 அடி தூரத்தில் பூமி மட்டத்திற்குச் சற்று தாழ்வாக ஒரு மண்டபமிருக்கிறது. அதனுள் ஒரு சிவலிங்கமுமிருக்கிறது. இதுவும் மற்ற விக்கிரகங்களுக்கு எந்த அம்சத்திலும் பின்வாங்கியதாகத் தெரியவில்லை: இதைச் சுற்றிலும் சதாகாலமும் நீர் ஊற்றுப் பெருக்கெடுத்து சிறு கால்வாயாக ஓடிக் கொண்டிருக்கிறது. சிவலிங்கத்திற்கு மாலை போட வேண்டுமானால் 12 அடி உயரமுள்ள ஏணி இல்லாமல் முடியாது.

குன்றின் அடிவாரத்தில், அதாவது துங்கபத்ரையின் தென் கரைமேல், தமிழ் நாட்டிலிருக்கும் ஆலயத்தைப்போல் ஒன்றிருக்கிறது. 1467 முதல் 18 ஆண்டுகள் ஆட்சி செய்த விருபாக்ஷிராயர் பெயரால் கட்டப்பட்டிருக்கும் இக் கோவிலுக்குள் வெகு ஆழமான பெரிய பொற்றாமரைத் தடாகம் பாழடைந்து தென்படுகிறது. இதனுள்ளிருக்கும் மூல விக்கிரகத்திற்கு இன்றைக்கும் ஒழுங்காய் பூஜைகள் நடந்தேறிவருவது பாராட்டத்தக்கது.

விருபாக்ஷிகோயிலின் சந்நிதியிலிருந்து நேரே கிழக்குநோக்கி சுமார் இரண்டு மைல் தூரத்திற்கு பெரிய கடைத்தெரு செல்லுகிறது. அதன் இருபக்கங்களிலும் அக்காலத்தே இருந்த கடைகள் இன்னும் அழியாமல், ஆனால் வௌவால்களுக்கு இருப்பிடமாயிருக்கிறது. இவைகளெல்லாம் சுண்ணாம்பு, செங்கல் கலப்பில்லாமல் கருங்கற்களாலேயே ஒன்றின் மேலொன்று அடுக்கிக் கட்டப்பட்டிருப்பதால் காலத்தச்சன்கூட இதை உருக்குலைக்க முடியாமல் போய்விட்டது போலும். இத்தெரு வழியாகவே சென்றால் விட்டலராயர் கோவிலில்போய்ச் சேருகிறோம். கோவிலினுள் நுழையும் போதே அந்த ஜில்லா மாஜிஸ்டிரேட்டின் எச்சரிக்கை தாங்கிய பலகை நம்கண்ணில் படுகிறது. ஹம்பியின் ஞாபகச்சின்னங்களாக விளங்கும் எந்தப்பொருளையும் சேதப்படுத்தக் கூடாதென்பதும், அப்படிச் செய்பவர்கள் மூன்றுமாத சிறைத் தண்டனையோ அல்லது 500 ரூபாய் அபராதமோ விதிக்கப்படுவார்களென்பதுதான் அந்த எச்சரிக்கை. ஆனால் கோவிலுக்குள் சென்று பார்த்தால் தலையுள்ள விக்கிரகம் ஒன்றுகூடத் தென்படவில்லை. ஏதாவது ஒன்றிற்குத் தலையிருந்தாலும் கை, கால்களைக் காணவில்லை. 1334-ல்

மாலிக்காபூர் வந்து அந்த இடத்தைச் சூறையிட்டபோது இந்த எச்சரிக்கைப் பலகை அங்கு இருந்திருக்காதல்லவா? ஆலயத்திற்குள்ளிருக்கும் இரண்டு பெரிய மண்டபங்களிலும் எத்தனை தூண் வரிசைகள்! ஒவ்வொரு தூணும் எவ்வளவு பெரியது! அதிலேயே எத்தனை சிறு சிறு தூண்கள்! ஒரு சிறுகல்லால் அவைகளைச் சுற்றித் தட்டிக்கொண்டே வந்தால் ஜலதரங்கம்போல் ஒலிக்கிறது. சிற்பியின் திறன்தான் என்ன!


சந்நிதிக்கு வலப்புறத்தில் கல்லாலேயே செதுக்கப்பட்டிருக்கும் அர்ச்சுனன் ரதம் யானைகளைக் கட்டியிழுத்தால் ஓடும் நிலைமையில், அவ்வளவு நுட்பமாக சக்கரங்களும், அச்சுக்களும் ஆணிகளும் கடையப்பட்டிருக்கின்றன.

ஹம்பியின் சுற்றுவட்டாரம் சுமார் 20-மைல்களுக்குப் பரவியிருப்பதாகத் தெரிகிறது. இதுவரையிலும் சொல்லி வந்தது அந்தச் சுற்றுக்கோட்டின் ஒரு சிறுபகுதிதான். இவைகளைச் சுற்றிப் பார்க்கவே ஒருநாள் ஓடி மறைந்து விட்டது. இந்தச் சுற்றுக்கோட்டை விட்டு ஹம்பி நகரத்துக்குள்ளேயே நுழைந்து அங்குள்ள அரண்மனையையும், கோட்டை கொத்தளங்களையும், ராணிகளின் ஸ்நான மண்டபங்களையும், நிலவறைகளையும், கோவில்களையும் காவலாளிகளின் இருப்பிடத்தையும், கொலுமண்டபத்தையும், இன்னும் இதுபோன்ற மற்றவைகளையும் கண்டால்தான் அக்காலத்தின் ராஜ்யபரிபாலனத்தின் மேன்மையை நாம் ஊகிக்க முடியும்.

---

அர்ச்சுனன் ரதம்





ஹம்பியில் மற்றொரு காட்சி